# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய வரலாறு**

**பகுதி : இந்திய தேசிய இயக்கம் (காந்திக்கு முன்)**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Free TN Books | www.freetnbooks.com

# இந்திய தேசிய இயக்கம்
# (காந்திக்கு முன்)

[Type text]

# இந்திய தேசிய இயக்கம்

- 1857ஆம் ஆண்டு தோன்றிய பெரும்புரட்சியின் மூலம் உருவானது.
- 1947ஆம் ஆண்டு விடுதலைக்கு காரணமாக அமைந்தது.

## தேசியம் வளர்வதற்கான காரணங்கள்

- இந்திய தேசிய இயக்கம் தோன்ற **ஆங்கில ஏகாதிபத்தியம்** முக்கிய காரணம்
- ஆங்கில ஏகாதிபத்தியத்தின் விளைவாக இந்தியா மேலைநாடுகளுடன் தொடர்பு கொண்டு இருந்தது.
- படித்த இளைஞர்களின் மொழியாக ஆங்கிலம் உருவானது.
- இராஜாராம் மோகன்ராய், நேரு, திலகர், காந்தி, பட்டேல், சுவாமி விவேகானந்தர் போன்ற தலைவர்கள் இந்தியர்களிடையே தன்னம்பிக்கை, புத்துணர்வை ஏற்படுத்தினர்.
- இந்தியன் மிரர், பம்பாய் சமாச்சர், இந்து, அமிர்தபஜார், கேசரி, மராத்தா போன்ற பத்திரிக்கைகள் பொதுமக்களிடையேயான கருத்துகளை பிரதிபலித்தது.
- பக்கிம் சந்திரசட்டர்ஜி, ரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இந்திய மக்களிடையே தேசிய உணர்வை பொங்கி எழச் செய்தது.
- 1878ல் கொண்டு வரப்பட்ட தாய்மொழி பத்திரிக்கை தடைசட்டம் பத்திரிக்கை சுதந்திரத்தை பறித்தது.
- 1857ம் ஆண்டு புரட்சி தேசியவாதம் மலர்வதற்கு காரணமாக அமைந்தது.
- ஆங்கிலேயர் பிரித்தாலும் கொள்கையை பின்பற்றினர்.
- ஆங்கிலேயர் தங்களை உயர்வாகவும், இந்திய மக்களை தாழ்வாகவும், இழிவாகவும் கருதினர்.
- அனைத்து உயர் பதவிகளும் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டது.
- இவைகள் இந்திய தேசியம் வளர வழிவகுத்தது.

# இந்திய விடுதலை இயக்கம்

## முதல் நிலை - காந்திக்கு முந்தைய காலம் (கி.பி 1885 - கி.பி1919)

- **1833 மற்றும் 1853ஆம்** ஆண்டு இந்தியர்களுக்கு உயர் பதவி அளிக்கும் பொருட்டு **இந்திய சாசனச் சட்டம்** நிறைவேற்றப்பட்டது.
- 1878 ஆயுதச் சட்டமும் மற்றும் பிராந்திய மொழி தடைச் சட்டங்களும் இந்தியர்களின் தேசிய உணர்வை அதிகப்படுத்தியது.

### இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் (1885)

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிகாரி **A.O ஹியூம்** ஆலோசனைப்படி 1885ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டம் **W.C.பானர்ஜி** தலைமையில் பம்பாயில் நடைபெற்றது.
- இந்தியா முழுவதும் 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### நோக்கம்

- சட்டமன்றங்கள் விரிவுபடுத்தல் மற்றும் பிரதிநிதித்துவம் வழங்கல்.
- கல்வியை பரப்புதல்.
- பத்திரிக்கை சுதந்திரம்.
- இறக்குமதி வரியை அதிகரித்தல்.
- இராணுவத்திற்கான செலவை குறைத்தல்.
- இந்தியர்களை உயர் பதவியில் அமர்த்துதல்.
- இலண்டனில் உள்ள இந்திய கவுன்சில் களைக்கப்படல்.



Free TN Books | www.freetnbooks.com

### மிதவாதிகள்

- ஆரம்ப காலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் படித்த நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர்.
- **சுரேந்திரநாத் பானா்ஜி, பெரோசா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம்.ஜி ரானடே** போன்றோர் மிதவாதிகள்
- சுரேந்திரநாத் பானர்ஜி **இந்தியாவின் பர்க்** என்று அழைக்கப்பட்டார்.
- 1876ஆம் ஆண்டு இந்திய கழகம் **சுரேந்திரநாத் பானர்ஜி** அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

### தீவிரவாதிகள்

- மிதவாதிகளின் கோரிக்கை **அரசியல் பிச்சை** போல் உள்ளது என வா்ணித்தனா்.
- பாலகங்காதர திலகர், லாலாலஜபதிராய், பிபின் சந்திரபால், அரவிந்த் கோஷ் போன்றோர் தீவிரவாதிகள்
- இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிரான முழுமையான இயக்கத்தை தோற்றுவித்தவர் பாலகங்காதர திலகர். இவரை **லோக் மானிய திலகர்** என்றும் அழைப்பர்.
- **மராத்தி, கேசரி** என்ற பத்திரிக்கை மூலம் பிரிட்டிஷ் கொள்கையை சாடினார்.
- **சுய ராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்** என்று முழங்கியவர் திலகர்.
- கணபதி, சிவாஜி பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வை தூண்டியவர் திலகர்.
- லாலாலஜபதிராய் "**பஞ்சாப்பின் சிங்கம்**" என்று அழைக்கப்பட்டவர்.
- இவர், 1916ஆம் ஆண்டு **தன்னாட்சி கழகத்தை** அமெரிக்காவில் தோற்றுவித்தார்.
- சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தில் போலீஸ் தடியடியில் காயமடைந்து 1928ஆம் ஆண்டு நவம்பர் 17ம் நாள் இயற்கை எய்தினார்.
- பிபின் சந்திரபால் ஒரு மிதவாதியாக இருந்து தீவிரவாதியாக மாறியவர்.

### இந்திய தேசிய காங்கிரஸ்

| ஆண்டு | தலைவர் | இடம் | முக்கியத்துவம் |
|---|---|---|---|
| 1885 | W.C. பானர்ஜி | பம்பாய் | முதல் கூட்டத்தில் 72 பிரதிநிகள் கலந்து கொண்டனர் |
| 1886 | தாதாபாய் நௌரோஜி | கல்கத்தா | - |
| 1887 | பத்ருதீன் தியாப்ஜி | மெட்ராஸ் | முதல் முஸ்லீம் தலைவர் தலைமை தாங்கினார் |
| 1888 | ஜார்ஜ் யூலே | அலகாபாத் | முதல் ஆங்கிலேய தலைவர் |
| 1889 | வில்லியம் வெடர்பர்ன் | பம்பாய் | - |
| 1890 | பெரோஸ்ஷா மேத்தா | கல்கத்தா | - |
| 1891 | அனந்தசார்லு | நாக்பூர் | - |
| 1892 | W.C. பானர்ஜி | அலகாபாத் | - |
| 1893 | தாதாபாய் நௌரோஜி | லாகூர் | - |
| 1894 | ஆல்பிரட் வெப் | மெட்ராஸ் | - |
| 1895 | சுரேந்திரநாத் பானர்ஜி | பூனா | - |
| 1896 | ரஹிம்துல்லா ஆ.சயானி | கல்கத்தா | தேசிய பாடலான வந்தே மாதிரம் முதன் முதலில் பாடப்பட்டது. |
| 1897 | C.சங்கரன்நாயர் | அம்ரோட்டி | - |
| 1898 | ஆனந்தமோகன்போஸ் | மெட்ராஸ் | - |



Free TN Books | www.freetnbooks.com

| | | | |
|---|---|---|---|
| 1899 | ரெமேஷ் சந்திரதத் | லக்னோ | - |
| 1900 | N.G.சந்தவார்க்கர் | லாகூர் | - |
| 1901 | தின்ஷா எதுல்ஜி வாச்சா | கல்கத்தா | - |
| 1902 | சுரேந்திரநாத் பானர்ஜி | அகமதாபாத் | - |
| 1903 | லால்மோகன் கோஷ் | மெட்ராஸ் | - |
| 1904 | ஹென்றி காட்டன் | பம்பாய் | - |
| 1905 | கோபாலகிருஷண கோகலே | பனாரஸ் | - |
| 1906 | தாதாபாய் நௌரோஜி | கல்கத்தா | - |
| 1907-08 | ராஷ்பிகாரி கோஷ் | சூரத், மெட்ராஸ் | - |
| 1909 | மதன்மோகன் மாளவியா | லாகூர் | - |
| 1910 | வில்லியம் வெடர்பர்ன் | அலகாபாத் | - |
| 1911 | பிஷன் நாராயன் தர் | கல்கத்தா | தேசிய கீதம் முதன் முதலில் இம்மாநாட்டில் பாடப்பட்டது. |
| 1912 | ரகுநாத் நரசின்கா முதோல்கர் | பங்கிப்பூர் | - |
| 1913 | நவாப் சையத் முகமது பகதூர் | கராச்சி | - |
| 1914 | பூபேந்திரநாத் போஸ் | மெட்ராஸ் | - |
| 1915 | சத்யேந்திர பிரசன்னா சின்கா | பம்பாய் | - |
| 1916 | அம்பிகா சரண் முஜீம்தர் | லக்னோ | 1.தீவிரவாதிகளும், மிதவாதிகளும் ஒன்றிணைந்தனர்.<br>2.நேரு முதன் முதலில் காந்திஜியை சந்தித்தார் |
| 1917 | அன்னிபெசன்ட் | கல்கத்தா | INC-ன் முதல் பெண் தலைவர் |
| 1918 | மதன்மோகன் மாளவியா | டெல்லி | - |
| 1919 | மோதிலால் நேரு | அமிர்தசரஸ் | - |
| 1920 | விஜயராகவாச்சாரி | நாக்பூர் | - |
| 1921 | அஜ்மல்கான் | அகமதாபாத் | - |
| 1922 | C.R தாஸ் | கயா | - |
| 1923 | அபுல்கலாம் ஆசாத் | டெல்லி | INCயின் இளைய வயது தலைவர் |
| 1924 | காந்தி | பெல்காம் | - |
| 1925 | சரோஜினி நாயுடு | கான்பூர் | INCயின் முதல் இந்திய பெண் தலைவர் |
| 1926 | ஸ்ரீனிவாச ஐயங்கார் | கவுகாத்தி | - |
| 1927 | முகமது அகமது அன்சாரி | மெட்ராஸ் | - |
| 1928 | மோதிலால் நேரு | கல்கத்தா | அனைத்து இந்திய இளைஞர் மாநாடு தொடங்கப்பட்டது |
| 1929-30 | நேரு | லாகூர் | பூர்ண சுதந்திரம் பெறுவதே INCயின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது. |

[Type text]

| | | | |
|---|---|---|---|
| 1931 | வல்லபாய் படேல் | கராச்சி | காந்தி - இர்வின் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது. |
| 1932-33 | மதன்மோகன் மாளவியா | டெல்லி, கல்கத்தா | காங்கிரஸ் தடை செய்யப்பட்டது |
| 1934-35 | ராஜேந்திர பிரசாத் | பம்பாய் | - |
| 1936-37 | நேரு | லக்னோ, பெய்ஸ்பூர் | முதல் முதலில் INC மாநாடு கிராமத்தில் நடைபெற்றது |
| 1938-39 | சுபாஷ்சந்திரபோஸ் | ஹரிபுரா, திரிபுரா | நேருவின் கீழ் தேசிய திட்டமிடல் குழு அமைக்கப்பட்டது |
| 1940-46<br>1940 | அப்துல் கலாம் ஆசாத் | ராம்கார்<br>கராச்சி | - |
| 1947 | J.P.கிருபாளினி | மீரட் | - |

### வங்கப்பிரிவினை (1905)

- இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றுவதற்கு 1905ஆம் ஆண்டு வங்கப்பிரிவினை ஒரு தீப்பொறியாக அமைந்தது.
- 1905 வங்கப்பிரிவினையை **கர்சன்பிரபு** கொண்டு வந்தார்.
- 1905ஆம் ஆண்டு அக்டோபர் 16ம் நாள் வங்கப்பிரிவினை நடைமுறைக்கு வந்தது.
- நிர்வாக வசதிக்காக வங்கம் இரண்டாக பிரிக்கப்பட்டது என்று கர்சன் கூறினார்.
- இந்தியர்கள் வங்கப்பிரிவினையை இந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரிக்கும் சூழ்ச்சி என்று கருதினர்.
- தீவிரவாதிகளும், மிதவாதிகளும் **பிரித்தாளும் கொள்கையின் அறிமுகம்** என்றனர்.
- 1911ஆம் ஆண்டு வங்கம் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இதன் விளைவு பொருளாதார புறக்கணிப்பு என்ற சுதேசி இயக்கம் தோன்ற காரணமாயிற்று.
- **சுதேசி** - **சொந்த நாடு** என பொருள்படும்.
- இந்தியர்கள் **வந்தே மாதரம்** என்ற தாய்நாட்டு பற்றுமிக்க முழக்கத்தை எழுப்பினர்.

### சுதேசி இயக்கம்

- சுதேசி இயக்கம் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.
  1. அரசுப்பணி, நீதிமன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை புறக்கணித்தல்.
  2. அந்நியப்பொருட்களை வாங்க மறுத்து சுதேசி பொருட்களை வாங்கி ஆதரித்தல்.
  3. தேசிய பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவி தேசியக் கல்வியை வளர்த்தல்.
- சுதேசி இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசு பல சட்டங்களை இயற்றியது.
- வந்தே மாதரம் முழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டது.
- மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டது.

### முஸ்லீம் லீக் (1906)

- காங்கிரஸின் நடவடிக்கைகள் முஸ்லீம்கள் இடையே ஒருவித பயத்தை உண்டாக்கியது.
- தங்கள் முன்னேற்றத்திற்கான தனியான அமைப்பு தேவை என கருதினர்.
- ஆங்கில அரசு முஸ்லீம்களின் கோரிக்கையை ஏற்றது.
- 1906 **டாக்கா**வில் நடைபெற்ற முஸ்லீம்கள் கல்வி மாநாட்டில் **நவாப் சலீம்முல்லா** என்பவர் முஸ்லீம்களின் நலனுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கருத்து வெளியிட்டார்.
- அதனடிப்படையில் 1906ஆம் ஆண்டு டிசம்பர் 30ம் நாள் **அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சி** தோற்றுவிக்கப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

**சூரத்பிளவு (1907)**

- காங்கிரஸ் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் இடையே கருத்து வேறுபாடு அதிகரித்தது.
- 1907 சூரத் மாநாட்டில் தலைவர்களை தேர்ந்தெடுப்பதில் வன்முறை ஏற்பட்டு மிதவாதிகளும், தீவிரவாதிகளும் பிரிந்தனர்.
- **கோபாலகிருஷ்ண கோகலே** மிதவாதிகளின் தலைவர் ஆனார்.
- **பாலகங்காதர திலகர்** தீவிரவாதிகளின் தலைவர் ஆனார்.

**மின்டோமார்லி சீர்திருத்தம் (1909)**

- **1909ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்** மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் என்றழைக்கப்பட்டது.
- அப்போது இந்தியாவிற்கான அயல்உறவு செயலர் மிண்டோ மார்லிபிரபு.
- தலைமை ஆளுநருடைய நிர்வாக குழுவில் முதன்முறையாக இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் **எஸ்.பி.சின்ஹா.**
- 1909 மிண்டோமார்லி சீர்திருத்தம் முஸ்லீம்களை திருப்திபடுத்த கொண்டுவரப்பட்டது.
- முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி வழங்கப்பட்டது
- பம்பாய் மற்றும் சென்னை மாகாணங்களில் நிர்வாக குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டது.
- இங்கிலாந்திலிருந்த இந்திய கவுன்சிலிலும் இரண்டு இந்தியர்கள் இடம் பெற்றனர்.
- இச்சட்டத்தின்படி தனித் தொகுதிகள் ஒதுக்குதல் என்ற கோட்பாடு 1947ஆம் ஆண்டு இந்திய பிரிவினைக்கு வழிவகுத்தது.

**முதல் உலகப்போர் (கி.பி. 1914-1918)**

- 1914ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தோன்றியது
- பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஓர் அணியில் நின்றனர்.
- ஆங்கிலேயர்க்கு உதவியாக இந்தியர்கள் செயல்பட்டனர்.
- இந்தியர்களுக்கு ஆங்கிலேயர்கள் பொறுப்பாட்சி வழங்குவார்கள் என இந்தியர்கள் நம்பிக்கை கொண்டு இருந்தனர்.

**தன்னாட்சி இயக்கம் (1916)**

- 1916ஆம் ஆண்டு இரண்டு தன்னாட்சி கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- **பாலகங்காதர திலகர்** தன்னாட்சி கழகத்தை **பூனா**வில் ஏப்ரல் மாதம் தொடங்கினார்.
- **அன்னிபெசன்ட் அம்மையார்** தன்னாட்சி கழகத்தை **சென்னை**யில் செப்டம்பரில் தோற்றுவித்தார்.
- இந்த இரண்டு அமைப்புகளின் செயல்பாடுகள் தன்னாட்சி மற்றும் சுயராஜ்ஜியத்தை பெறுவதற்காக தொடங்கப்பட்டது.
- அன்னிபெசன்ட் அம்மையாரின் பேச்சு இந்தியர்களிடையே மிகப் பெரிய அளவில் உற்சாகத்தை தோன்றுவித்தது.
- அன்னிபெசன்ட் அம்மையாரின் பத்திரிக்கையான **நியூஇந்தியா** என்ற பத்திரிக்கைக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்தது.
- **மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ்** தன்னாட்சி இயக்கத்திற்கான முழு ஆதரவை தந்தனர்.
- தன்னாட்சி இயக்கம் இந்திய தேசிய இயக்கத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தது. சுதேசி இயக்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

**லக்னோ ஒப்பந்தம் (1916)**

- இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு 1916ல் லக்னோவில் நடைபெற்றது.
- மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் ஒன்றுபட்டனர்.
- காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் பிரிட்டிஷாருக்கு எதிராக ஒன்றிணைத்து போராடுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.
- லக்னோ ஒப்பந்தம் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும்.
- நேரு காந்தியை முதன்முதலில் சந்தித்தார்.

**ஆகஸ்ட் அறிக்கை (1917)**

- 1917ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் நாள் இங்கிலாந்து அயலுறவு அமைச்சர் **மாண்டேகு** இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இவ்வறிக்கையை வெளியிட்டார்.
- இவ்வறிக்கை இந்தியாவின் அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி குறிப்பிட்டது.
- இந்தியாவில் படிப்படியாக தன்னாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும் என அறிவித்தது.

**மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் (1919)**

- 1917ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் நாள் இந்தியாவிற்கான அயல் உறவு செயலர் மாண்டேகு, காமன்ஸ் சபையில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.
- இதன்படி படிப்படியாக இந்தியாவில் பொறுப்புள்ள அரசாங்கம் அறிமுகப்படுத்தப்படும்.
- 1919ஆம் ஆண்டு ஆங்கிலேய பாராளுமன்றம் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை கொண்டு வந்தது.
- மத்திய மற்றும் மாகாண சட்டமன்றங்கள் விரிவுபடுத்தபட்டன.
- **இரட்டை ஆட்சி முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாகாண அதிகாரங்கள் யாவும் ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாற்றப்பட்ட துறைகள் எனவும் இருப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
- இந்தியர்கள், சீக்கியர்கள், கிறுஸ்துவர்கள் ஆகியோருக்கு ஆங்கிலேயர்களால் தனித்தனி தொகுதி வழங்கப்பட்டது.
- இந்திய தேசிய காங்கிரஸ் இச்சட்டத்தை நிராகாரித்தது.
- இதனை ஏற்றுக்கொள்வது இந்தியர்களுக்கு மதிப்புடையதாகாது என்றார் **அன்னிபெசன்ட்** அம்மையார்.
- இந்த சட்டத்தின் மிகப்பெரிய குறைபாடு, மாகாணங்களில் கொண்டுவரப்பட்ட **இரட்டை ஆட்சி** முறையின் கீழ் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டதே ஆகும்.

**ரௌலட் சட்டம் (1919)**

- 1919ஆம் ஆண்டு ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- இச்சட்டத்தின்படி சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம்.
- இச்சட்டத்தை எதிர்த்து விண்ணப்பமோ அல்லது மேல்முறையீடோ செய்ய இயலாது.
- இச்சட்டம் **கருப்புச் சட்டம்** என்று கருதப்பட்டது.
- காந்தியடிகள் தலைமையில் ரௌலட் சட்டம் கடுமையாக எதிர்க்கப்பட்டது.
- **1916, ஏப்ரல் 6** நாடு முழுவதும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

**ஜாலியன்வாலாபாக் படுகொலை (1919)**

- 1919ஆம் ஆண்டு **ஏப்ரல்** 13ம் நாள் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு முக்கிய திருப்புமுனை ஆகும்.
- இராணுவத் தளபதி **ஜெனரல் டயர்** பொதுக் கூட்டங்களுக்கு தடைவிதித்து அரசியல் தலைவர்களை கைது செய்தார்.
- 1919ஆம் ஆண்டு ஏப்ரல் 13 நாள் பைசாகி என்ற அறுவடை திருநாள் அன்று **ஜாலியன் வாலாபாக் பூங்கா**வில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் **ஜெனரல் டயர்** எவ்வித முன்னறிவிப்புமின்றி துப்பாக்கி சூடு நடத்தினார்.
- இந்த படுகொலையை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன..
- பலமக்கள் படுகொலை செய்யப்பட்டதையும், பலர் படுகாயம் அடைந்ததை எதிர்த்து இரவீந்திரநாத் தாகூர் தனது **நைட்வுட் பட்டத்தை** துறந்தார்.

**கிலாபத் இயக்கம் (1919)**

- முதல் உலகப்போரில் துருக்கியின் தோல்வியே கிலாபத் இயக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.
- உலக முஸ்லீம் மக்களின் சமய தலைவர் **காலிப்** அவமதிக்கப்பட்டார்.
- இது முஸ்லீம்களுக்கு பெருத்த அவமானமாக கருதினர்.
- ஆங்கிலேய அரசுக்கு எதிராக இந்தியாவில் **முகமத் அலி, சௌகத் அலி என்ற அலி சகோதரர்கள்** கிலாபத் இயக்கத்தை தொடங்கினர்.
- **மௌலான அபுல்கலாம் ஆசத், எம்.ஏ.அன்சாரி, சைபுதீன் கிச்லு** போன்றோர் இவ்வியக்கத்தை தலைமை ஏற்று நடத்தினர்.
- 1919ஆம் ஆண்டு அக்டோபர் 19ம் நாள் **கிலாபத்** தினம் அனுசரிக்கப்பட்டது.
- கிலாபத் இயக்கம் 1920ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்துடன் இணைந்தது.
- காந்தி முழுமனதுடன் இவ்வியக்கத்தை ஆதரித்தார்.

**சிம்லா ஒப்பந்தம்**

- 1945ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஒரு அரசியல் மாநாடு மற்றும் பேச்சுவார்த்தை நிகழ்வு
- இம்மாநாடு வைசுராய் ஆர்ச்சி **பால்ட் வேவல்** என்பவரால் கூட்டப்பட்டது.
- இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.
- இம்மாநாட்டில் முக்கிய பேச்சுவார்த்தை
    1. இந்தியாவிற்கு சுய ஆட்சி வழங்குதல்
    2. முஸ்லீம்களுக்கு சட்டமன்றத்தில் தனியே பிரதிநிதித்துவம் வழங்குவது.
    3. பெரும்பான்மையாக உள்ள மாகாணத்தில் **சிறுபான்மை மதத்தினரின் உரிமைகள் பாதுகாப்பது.**
- 1946ஆம் ஆண்டு **மாகாண சட்டமன்றங்களுக்கும், நடுவன் நாடாளுமன்றங்களுக்கும்** புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டன.
- தேர்தல் முடிந்தப்பின்பு சிம்லாவில் அனைத்து தரப்பினரும் கூடி எத்தகு சுய ஆட்சி அரசியல் முறையினை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.
- பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் ஓர் ஆண்டு கழித்து இந்தியா சமய அடிப்படையில் பிரிவினை செய்யப்பட்டது.

## தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய வரலாறு**

**பகுதி : இந்திய தேசிய இயக்கம் (கி.பி.1920 முதல் கி.பி.1947 வரை)**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய தேசிய இயக்கம்
# (கி.பி.1920 முதல் கி.பி.1947 வரை)

# இந்திய விடுதலை இயக்கம்- (கி.பி.1920 முதல் கி.பி.1947 வரை)

### காந்தி வருகை

- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869ஆம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் குஜராத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார்.
- 1893ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா சென்ற அவர் இன ஒதுக்கள் கொள்கைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்.
- 1917ஆம் ஆண்டு பீகாரில் **சம்ப்ரான்** என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச்செடி பண்ணையார்களுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை பயன்படுத்தினார்.
- 1918ஆம் ஆண்டு குஜராத்தின் **கேடா மாவட்டத்தில்** சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தினார்.
- இது மோசமான விளைச்சலால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்கான போராட்டம்.
- 1918ஆம் ஆண்டு **அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின்** கோரிக்கையை ஆதரித்து சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.
- 1920ஆம் ஆண்டு திலகர் மறைந்த பின்னர் காந்தியடிகள் காங்கிரஸின் தலைவரானார்.
- காந்தியடிகள் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் இயங்கியது.
- காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தில் சத்தியாகிரகம் என்ற யுக்தியை கையாண்டார்.
- இது உண்மை மற்றும் அகிம்சையை அடிப்படையாக கொண்டது.

### ஒத்துழையாமை இயக்கம் (1920-1922)

- ரௌலட் சட்டத்தை எதிர்த்தும் ஜாலியன் வாலாபாக் படுகொலையை கண்டித்தும், மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்த சட்டத்தின் பயனின்மையை ஆங்கிலேயருக்கு உணர்த்தவும் ஒத்துழையாமை இயக்கத்தை 1920ஆம் ஆண்டு காந்தியடிகள் ஏற்படுத்தினார்.
- 1920ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற **நாக்பூர் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில்** ஒத்துழையாமை இயக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ஒத்துழையாமை இயக்கம் மூன்று நிலைகளில் நடைபெற்றது,
- முதற்கட்டமாக ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும், பட்டங்களையும், விருதுகளையும் துறந்தனர்.
- இரண்டாம் கட்டமாக வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தினர்.
- அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன.
- மூன்றாவது கட்டமாக **வரிகொடா இயக்கம்** 1921ஆம் ஆண்டு **அகமதாபாத்**தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி அரசுக்கு வரிசெலுத்தக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சௌரி சௌரா சம்பவம் (1922)

- 1922ஆம் ஆண்டு பிப்ரவரி 5ம் நாள் உத்திரபிரதேசத்தில் சௌரி சௌரா (கோரக்பூர்) என்னுமிடத்தில் ஆயிரம் விவசாயிகள் பங்கேற்ற பேரணி நடைபெற்ற போது காவலர்கள் விவசாயிகளின் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.

- அதனால், விவாசாயிகள் காவல் நிலையத்தை தீயிட்டு கொழுத்தினர். இதில் **22 காவலர்கள்** உயிரிழந்தனர்.
- சௌரி சௌரா சம்பவத்தின் காரணமாக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை 1922ஆம் ஆண்டு **பிப்ரவரி 11ம் நாள்** இடையிலேயே நிறுத்திக் கொண்டார்.

**சுயராஜ்ஜியக் கட்சி (1923-1925)**

- 1923ஆம் ஆண்டு ஜனவரி 1ம் நாள் **சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு** இருவரும் ஒன்று சேர்ந்து சுயராஜ்ஜிய கட்சியை தோற்றுவித்தனர்.
- சட்டமன்றங்களை புறக்கணிப்பதை தவிர்த்து ஆங்கில அரசை சட்டமன்றங்களிலேயே எதிர்ப்பது என்றும் முடிவு செய்தனர்.
- இந்தியாவில் தன்னாட்சி ஏற்படுத்தவும், வட்டமேசை மாநாடுகள் மூலம் கோரிக்கைகளை நிறைவேற்றவும் தீர்மானம் நிறைவேற்றியது.
- சுயராஜ்ஜியக் கட்சி 1919ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் பல மாறுதல்களை கொண்டு வந்தது.
- 1925ஆம் ஆண்டு சி.ஆர்.தாஸ் இறந்ததால் சுயராஜ்ஜிய கட்சி கலைக்கப்பட்டது.

**சைமன் தூதுக்குழு (1927-1928)**

- 1919ஆம் ஆண்டு சட்டத்தை ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்தவும் **சர் ஜான் சைமன்** தலைமையில் **ஏழு** பேர் கொண்ட குழு 1927ஆம் ஆண்டு ஆங்கில அரசால் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு சைமன் குழு என்று பெயர்
- இக்குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் ஆங்கிலேயர்கள். ஒரு இந்தியர் கூட இடம் பெறவில்லை.
- எனவே, 1928ஆம் ஆண்டு பிப்ரவரி 3ம் நாள் இக்குழு **பம்பாய்** வந்து இறங்கிய போது **சைமனே திரும்பிச் செல்** என்ற எதிர்ப்பு போராட்டங்கள் கிளம்பியது.
- 1928ஆம் ஆண்டு அக்டோபர் 30ம் நாள் லாகூரில் **பஞ்சாப் சிங்கம்** என்று அழைக்கப்பட்ட லாலாலஜபதிராய் சைமன் குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் போலீஸ் தடியடியில் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.
- 1930ஆம் ஆண்டு மே மாதம் **சைமன் குழு அறிக்கை** வெளியிடப்பட்டது.
- இவ்வறிக்கை இரட்டை ஆட்சியின் குறைபாடுகளை சுட்டிக் காட்டி மாநில சுயஆட்சியை பரிந்துரைத்தது.
- 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திற்கு இக்குழுவின் அறிக்கை அடிப்படையாக விளங்கியது.

**நேரு அறிக்கை (1928)**

- 1928ஆம் ஆண்டு பிப்ரவரி 28ல் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை வரைவதற்கு **எட்டுப் பேர் கொண்ட குழு** ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக **மோதிலால் நேரு** நியமிக்கப்பட்டார்.
- இக்குழுவின் அறிக்கை நேரு அறிக்கை எனப்படுகிறது.

**சிறப்புக் கூறுகள்**

1. நிலையாக டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுதல்.
2. மத்தியில் முழு பொறுப்பு வாய்ந்த அரசு.
3. மாகாணங்களுக்கு சுய ஆட்சி

4. மத்திய மாகாண அரசுக்களுக்கிடையே தெளிவான அதிகார பகிர்வு.
5. மத்தியில் இரண்டு அவைகள் கொண்ட சட்டமன்றம்.

- முஸ்லீம் லீக் தலைவரான முகமது அலி ஜின்னா நேரு அறிக்கை முஸ்லீம் மக்களின் நலனுக்கு எதிரானது என்று கருதி தனது 14 **அம்ச கோரிக்கையை** வெளியிட்டார்.

### லாகூர் மாநாடு (1929)

- 1929ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு லாகூரில் ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது.
- இம்மாநாட்டில் **பூர்ண சுதந்திரம் பெறுவதே** இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது.
- டிசம்பர் 31, 1929ஆம் ஆண்டு நள்ளிரவில் வந்தே மாதரம் என்ற பாடலுடன் **ராவி நதிக்கரையில்** மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது.
- ஜனவரி 26, 1930ஆம் ஆண்டு இந்திய சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட்டது.
- விடுதலைக்குப் பின் 1950ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த தினமான ஜனவரி 26 ம் நாள் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது.

### சட்டமறுப்பு இயக்கம் (உப்புசத்தியாகிரகம் 1930)

- காந்தியடிகள் 1930ல் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார்.
- **முழு சுதந்திரம் பெறுவதே** இதன் நோக்கமாகும்.
- உப்பு மீது ஆங்கில அரசு வரி விதித்தது. இதனை எதிர்த்து காந்தியடிகள் **மாரச் 12**, 1930ஆம் ஆண்டு சட்டமறுப்பு போராட்டத்தை மேற்கொண்டார்.
- காந்தியடிகள் 79 **தொண்டர்களுடன்** அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கி குஜராத்திலுள்ள தண்டி வரை 400 கி.மீ பயணம் மேற்கொண்டார்.
- தண்டியில் உப்புக்காய்ச்சி ஏப்ரல் 6ம் நாள் உப்புச்சட்டத்தை மீறினார்.
- தமிழ்நாட்டில் **சி.இராஜகோபாலச்சாரியார்** தலைமையில் திருச்சியிலிருந்து தொடங்கி வேதாரண்யத்தில் உப்புச் சட்டங்களை மீறி, உப்புக் காய்ச்சினர்.

### வட்ட மேசை மாநாடுகள் ( 1930-1932)

#### முதல் வட்ட மேசை மாநாடு

- 1930ஆம் ஆண்டு முதல் வட்ட மேசை மாநாடு இலண்டனில் நடைபெற்றது.
- சட்டமறுப்பு இயக்கம் இந்தியாவில் நடைபெற்று கொண்டு இருந்ததால் காங்கிரஸ் கட்சி இம்மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. எனவே, இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

#### காந்தி-இர்வின் ஒப்பந்தம் (1931)

- முதல் வட்ட மேசை மாநாடு தோல்வியில் முடிந்ததால் காந்தியை சந்திக்க இர்வின் பிரபுவை பிரிட்டிஷ் அரசு இந்தியாவிற்கு அனுப்பியது.
- 1931ஆம் ஆண்டு மார்ச் 8ம் நாள் காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது.

**காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகள்**

- சட்ட மறுப்பு இயக்கத்தை கைவிட வேண்டும் என்றும், இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.
- ஆங்கில அரசு போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்வது என்றும், உப்புச் சட்டங்களை திரும்ப பெறுவது என்றும் ஒப்புக் கொண்டது.
- பகத்சிங், ராஜ்குரு, அக்தேவ் போன்றோரை விடுவிக்க ஆங்கில அரசு மறுத்து விட்டது.

**இரண்டாம் வட்ட மேசை மாநாடு (1931)**

- இரண்டாம் வட்ட மேசை மாநாடு இலண்டனில் 1931ல் நடைபெற்றது
- காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின்படி காந்தியடிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.
- இம்மாநாட்டில் முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சனைக்கு எந்த தீர்வும் ஏற்படவில்லை.
- எனவே, மீண்டும் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.

**வகுப்புவாத அறிக்கை (பூனா ஒப்பந்தம் 1932)**

- இரண்டாவது வட்ட மேசை மாநாட்டின் இறுதியில் இங்கிலாந்து **பிரதமர் ராம்சே மெக்டொனால்டு** 1932ஆம் ஆண்டு வகுப்பு வாத அறிக்கையை வெளியிட்டார்.
- இவ்வறிக்கையில் சிறுபான்மையினர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இதனை தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் பி.ஆர்.அம்பேத்கார் வரவேற்றார்.
- காந்தியடிகள் இதனை எதிர்த்து 1932ஆம் ஆண்டு செப்டம்பர் 20ம் நாள் **ஏர்வாடா** சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.
- 1932ஆம் ஆண்டு காந்தியடிகள், அம்பேத்காருக்கும் இடையே ஏற்பட்ட **பூனா உடன்படிக்கையின்படி** உண்ணாவிரதத்தை காந்தி கைவிட்டார்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித்தொகுதி ஒதுக்கீடு கைவிடப்பட்டது
- சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அதிக எண்ணிக்கையிலான இடங்கள் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.
- இவ்வுடன்படிக்கையின்படி மாகாண சட்டமன்றங்களில் 148 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு காங்கிரஸ் ஒதுக்கீடு செய்தது. வகுப்பு கொடையின்படி 71 இடங்களே இவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது.

**மூன்றாவது வட்ட மேசை மாநாடு (1932)**

- 1932ஆம் ஆண்டு இலண்டனில் கூடியது
- காங்கிரஸ் தலைவர்கள் இதில் பங்கு பெறவில்லை
- எனவே, இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

**இந்திய அரசுச் சட்டம் (1935)**

- 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்டது.
- சைமன் குழு அறிக்கை மற்றும் மூன்று வட்ட மேசை மாநாடுகளின் முடிவுகள் அடிப்படையில் இச்சட்டம் இயற்றப்பட்டது.
- 1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டப்படி 1937ஆம் ஆண்டு பிப்ரவரியில் மாகாண சட்டமன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெற்றன.

**சட்டத்தின் அம்சங்கள்**

1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
2. மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது
3. மத்தியில் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.
4. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களை தீர்த்து வைக்க கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவப்பட்டது
5. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது.

**இரண்டாம் உலகப் போர் (1939-1945)**

- 1937ஆம் ஆண்டு மாநிலங்களில் பொது தேர்தல் நடைபெற்றது. அதில் 9 மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்று மந்திரி சபையை அமைத்தது.
- ஆங்கில அரசு காங்கிரஸ் தலைவர்களை கலந்தாலோசிக்காமல் இந்தியாவை இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுத்தியதை காங்கிரஸ் விரும்பவில்லை.
- இதை எதிர்த்து 1939ல் காங்கிரஸ் ஒன்பது மாநிலங்களில் அமைச்சரவைகளை ராஜினாமா செய்தனர்.
- இதனை முஸ்லீம் லீக் தலைவர் முகமது அலி ஜின்னா வரவேற்று 1939, **டிசம்பர் 22ம்** நாளை விடுதலை நாளாக கொண்டாடினார்.
- இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தனித்தனியாக இரு நாடுகள் தேவை என்றும் கூறினார்.
- 1940ஆம் ஆண்டு மார்ச்சில் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் கோரிக்கையை முன் வைத்தது.

**பாகிஸ்தான் கோரிக்கை (1940)**

- முகமது அலிஜின்னா 1940ஆம் ஆண்டு லாகூர் முஸ்லீம் லீக் மாநாட்டில் தனிநாடு கோரிக்கையை வெளியிட்டார்.
- இரு நாட்டு கொள்கையின் மூலம் இந்திய நாட்டை இந்துக்களுக்கு இந்தியா என்றும், முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் என்றும் பிரிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

**ஆகஸ்டு நன்கொடை (1940)**

- இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்தின் போர் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவதற்காக அரசாங்கம் ஆகஸ்டு 8, 1940ல் ஆகஸ்டு சலுகையை அறிவித்தது.

  **அம்சங்கள்**

  1. டொமினியன் அந்தஸ்து
  2. அரசு பிரதிநிதியின் செயற்குழு விரிவாக்கப்படும்
  3. அதிகமான இந்தியர்களை கொண்ட அரசியல் அமைப்பு குழு உருவாக்கப்படும்.
- இதனை காங்கிரஸ் குழு முற்றிலுமாக நிராகரித்தது.

**தனிநபர் சத்தியாகிரகம் (1940-1941)**

- தனிநபர் சத்தியாகிரகம் வன்முறையற்ற குறைந்த அளவு தொண்டர்களை கொண்டு அடையாளமாக நடத்தப்பட்ட இயக்கம் ஆகும்.
- தனிநபர் சத்தியாகிரகத்தில் முதன்முதலில் ஈடுபட்டவர் ஆச்சாரிய **வினோபாபாவே**.
- ஜவர்கர்லால் நேரு இச்சத்தியாகிரகத்தில் இரண்டாவதாக ஈடுபட்டு நான்கு மாதம் சிறைதண்டனை பெற்றார். தனிநபர் சத்தியாகிரகம் 15 மாதங்கள் நீடித்தது.
- தனிநபர் சத்தியாகிரகத்தின் முக்கிய நோக்கம் **போருக்கு எதிரான பேச்சுரிமையே**.

**கிரிப்ஸ் தூதுக்குழு (1942)**

- போர் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறும் பொருட்டு ஆங்கிலேயர் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- 1942ஆம் ஆண்டு மார்ச் மாதம் சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது.
- இக்குழு கிரிப்ஸ் தூதுக்குழு என அழைக்கப்பட்டது.
- இக்குழு இரண்டாம் உலகப்போரில் உதவிக்கரமாய் இந்தியா இருக்க வேண்டும் என அறிவித்தது.
- போருக்குப்பின் இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என அறிவித்தது.
- ஆனால், முழு சுதந்திரம் வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.
- சுதேச அரசுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்பு குழு ஏற்படுத்தப்படும்.
- **காந்தியடிகள்** கிரிப்ஸ் தூதுக்குழு உறுதி மொழிகளை **திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை** எனக் குறிப்பிட்டார். கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைந்தது.
- பாகிஸ்தான் கோரிக்கை ஏற்கப்படாததால் முஸ்லீம் லீக் இதனை நிராகரித்தது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942)**

- கிர்ப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி மற்றும் இந்தியாவின் மீது ஜப்பான் படையெடுக்கும் என்ற அச்சம் போன்ற காரணங்களால் ஆங்கிலேயரை நாட்டை விட்டு வெளியேற செய்யும் பொருட்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை மகாத்மா காந்தி தொடங்கினார்.
- இந்தியாவை விட்டு பிரிட்டிஷார் வெளியேறினால் மட்டுமே ஓர் இடைக்கால அரசை அமைக்க முடியும் மற்றும் இந்து, முஸ்லீம் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று அவர் கருதினார்.
- **1942- ஆகஸ்டு 8ம் நாள்** பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- அதே நாளில் காந்தி **செய் அல்லது செத்துமடி** என்று அறைக்கூவலை விடுத்தார்.
- வெள்ளையனே வெளியேறு போராட்டம் நாட்டின் விடுதலைக்கான உச்சகட்ட போராட்டமாகும்.

**சுபாஷ் சந்திரபோஸ் - இந்திய தேசிய ராணுவம் (1942)**

- 1927ல் நேதாஜி இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். 1938ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1939ல் அவர் முற்போக்கு கட்சியை தொடங்கினார்.
- ஜப்பானிய அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து இந்தியர்களுக்காக இந்திய தேசிய காங்கிரஸை அமைத்தார்.
- 1943ல் சிங்கப்பூர் சென்றார். இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமை பொறுப்பை இராஷ்பிகாரி போஸ் அவர்கள் சுபாஷ்சந்திர போசிடம் ஒப்படைத்தார்.
- **ஆசாத் ஹிந்த் ஃபவுஜ்** என்று அழைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாக சுபாஷ் சந்திரபோஸ் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து இவர் நேதாஜி என்று அழைக்கப்பட்டார்.
- இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு தமிழ்நாட்டைச் சேர்ந்த **லஷ்மி** என்ற பெண்ணின் தலைமையில் **ஜான்சி ராணி** பெயரில் அமைக்கப்பட்டது.
- **ஜெய்ஹிந்த், டெல்லியை நோக்கிச்செல்** (டெல்லி சலோ) ஆகியவை இவரது புகழ்பெற்ற முழக்கங்கள் ஆகும்.
- நேதாஜி பாங்காங்க்கிலிருந்து டோக்கியோவிற்கு செல்லும் வழியில் விமான விபத்தில் உயிரழந்ததாக நம்பப்படுகிறது.

**அமைச்சரவை தூதுக்குழு (1946)**

- 1946ஆம் ஆண்டு மார்ச் 15ம் நாள் **அட்லிபிரபு வரலாற்று சிறப்புமிக்க அறிக்கையை** வெளியிட்டார்.
- **பெதிக் லாரன்ஸ், ஏ.வி.அலெக்சாண்டர் மற்றும் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** ஆகிய மூவர் அடங்கிய குழு இந்தியாவிற்கு வந்தது.
- இக்குழு கேபினெட் அல்லது அமைச்சரவை தூக்குழு என்றழைக்கப்பட்டது.

**பரிந்துரைகள்**

1. இக்குழு கூட்டாட்சி அரசு அமைய பரிந்துரை செய்தது.
2. அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்பட வேண்டும் என்று கூறியது.
3. அச்சட்டம் தயாராகும் வரை அனைத்துக் கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசு ஒன்று மத்தியில் அமைக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

**இடைக்கால அரசு (1946)**

- ஜவகர்லால் நேருவை பிரதமராக கொண்ட இடைக்கால அரசு 1946, **செப்டம்பர் 2ம்** நாள் அமைக்கப்பட்டது.
- இவ்வரசை ஏற்படுத்த நேரு ஜின்னாவின் உதவியை நாடினார். ஆனால் ஜின்னா மறுத்துவிட்டார்.
- தனது பாகிஸ்தான் கோரிக்கையில் ஜின்னா பிடிவாதமாக இருந்தார்.
- எனவே, இந்திய பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

**மவுண்ட்பேட்டன் திட்டம் (1947)**

- 1947ம் ஆண்டு பதவியேற்ற **மவுண்ட்பேட்டன் ஆங்கில அரசின் கடைசி அரசப் பிரதிநிதி** ஆவார்.
- இந்திய அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காண 1947, ஜூன் 3ல் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அது **மவுண்ட்பேட்டன் திட்டம் அல்லது ஜூன் 3ம் நாள் திட்டம்** என்றழைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இரு நாடுகளாக பிரிக்கப்படும்.
- இந்திய சுதேசி அரசுகள், இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து கொள்ளவோ அல்லது சுதந்திரத்துடன் இருக்கவோ செய்யலாம் என அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டத்தை காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக் கொண்டன.

**இந்திய விடுதலைச் சட்டம் (1947)**

- இங்கிலாந்து அரசு 1947 ஆம் ஆண்டு ஜுலை 18ம் நாள் இந்திய விடுதலைச் சட்டத்தினை நிறைவேற்றியது. இதன்படி இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை 1947ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்டது.
- ஆங்கில அரசின் அதிகாரங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு மாற்றப்பட்டன.
- பஞ்சாப், வங்காளம் என்ற இரண்டு மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை வரையறுக்கும் ஆணையம் ஏற்படுத்தப்படும்.
- இவ்விரண்டு நாடுகளின் அரசியலமைப்பு குழுக்களுக்கு அரசியல் அமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும்.
- ராட்கிளிப் தலைமையிலான எல்லை வரையறுக்கும் ஆணையத்தால் இந்தியா-பாகிஸதான் எல்லை பிரிக்கப்பட்டது.

- மேற்கு பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், கிழக்கு வங்காளம், அசாமில் உள்ள சில்ஹட் மாவட்டம் ஆகியவை பாகிஸ்தானில் இணைந்தன.
- மீதமுள்ள பகுதிகள் இந்தியாவில் இடம்பெற்றன..
- **1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ம்** நாள் இந்தியா விடுதலைப் பெற்றது
- **1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ம்** நாள் பாகிஸ்தான் விடுதலைப் பெற்றது.
- சுதந்திர இந்தியாவின் **முதல் தலைமை ஆளுநராக மவுண்ட் பேட்டன் பிரபு** பொறுப்பேற்றார்.
- பின்னர் சி.இராசகோபாலாச்சாரியர் **சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநராகப்** பதவி ஏற்றார்.
- பாகிஸ்தானின் **முதல் தலைமை ஆளுநராக** முகமது அலி ஜின்னா பதவியேற்றார்.
- டெல்லி செங்கோட்டையில் ஆங்கிலக்கொடி (யூனியன் -ஜாக்) இறக்கபட்டு, இந்திய மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது.
- 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இதனை **நேரு** நம் வாழ்வில் **ஒளி மறைந்தது எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது** என்றார்.

### சுதேசி சமஸ்தானங்களின் இணைப்பு

- இந்தியா சுதந்திரம் அடைந்த போது நாட்டில் ஏறத்தாழ **565** சுதேசி அரசுகள் இருந்தன.
- இந்த அரசுகளை இந்தியாவுடன் இணைக்கும்பொருட்டு சர்தார் வல்லபாய் பட்டேலிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஏறத்தாழ **562** சுதேசி அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. ஆனால், **காஷ்மீர், ஹைதராபாத், ஜுனாகத்** ஆகியையவை இந்தியாவுடன் இணையத் தயங்கின.
- நேருவின் தலைமையில் பட்டேல் தன் திறமையினாலும் கடுமையான நடவடிக்கைகளாலும் அந்தப் பகுதிகளை இந்தியாவுடன் இணைத்தார்.
- இதனால் **இந்தியாவின் பிஸ்மார்க்** என்றும், இந்தியாவின் **இரும்பு மனிதர்** என்றும் பட்டேல் அழைக்கப்பட்டார்.

### பிரெஞ்ச் மற்றும் போர்ச்சுக்கீசியார்கள் பகுதிகள் இணைப்பு

- பிரெஞ்ச் அரசு அனுமதியுடன் **பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம்** மற்றும் **சந்திரநாகூர்** ஆகிய பகுதிகள் 1954ம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.
- **கோவா, டையூ மற்றும் டாமன்** ஆகிய பகுதிகள் ஆகிய பகுதிகளை இந்திய அரசு தனது ராணுவ நடவடிக்கைகள் மூலம் 1961ம் ஆண்டு அப்பகுதிகளை இந்தியாவுடன் இணைத்தது.

### புதிய இந்தியா உருவாக்கம்

- பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் ஒன்றுகூடி, அரசியல் நிர்ண சபையை ஏற்படுத்தி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்.
- இந்திய அரசியலமைப்பு நிர்ணசபைக்கு **டாக்டர்.இராஜேந்திரபிரசாத்** தலைமை தாங்கினார்.
- சட்ட வரைவுக் குழு **டாக்டர். அம்பேத்காரை** தலைவராக கொண்டு அமைக்கப்பட்டது.
- இக்குழு **நவம்பர் 26, 1949ஆம்** ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி வழங்கியது.
- இதன்படி **1950ஆம் ஆண்டு ஜனவரி 26ம்** நாள் இந்திய குடியரசு தினமாக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் **இந்திய அரசியலமைப்புச் சட்டம்** நடைமுறைக்கு வந்தது.
- **டாக்டர். இராஜேந்திரபிரசாத்** சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசு தலைவரானார்.

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய வரலாறு**

**பகுதி : இந்திய தேசிய இயக்கம்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Free TN Books | www.freetnbooks.com

# TNPSC

# GROUP –IV



# இந்திய தேசிய இயக்கம்



Free TN Books | www.freetnbooks.com

# 1857ம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சி

- ஆங்கில வரலாற்று அறிஞர்கள் 1857ம் ஆண்டு கிளர்ச்சியை **படைவீரர்கள் கிளர்ச்சி** என அழைத்தனர்.
- இந்திய வரலாற்று அறிஞர்கள் 1857ம் ஆண்டு கிளர்ச்சியை **முதல் இந்திய சுதந்திரப்போர்** என அழைத்தனர்.
- 1857ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியை சர் ஜான் லாரன்ஸ் வெறும் இராணுவப் புரட்சி என்றும், பிரிட்டிஷ் ஆட்சியை தூக்கி எறிய நடத்தப்பட்ட சதியல்ல என்றார்.
- **வீர சவார்க்கர்** இதனை **முதல் இந்திய விடுதலைப் போர்** என்று குறிப்பிட்டுள்ளார்.
- **எஸ்.என்.சென்** 1857ஆம் ஆண்டு கலகம் **இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதி** என்று கருதினர்.
- 1857 புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநர் **கானிங்பிரபு.**

## புரட்சிக்கான காரணங்கள்

### 1. அரசியல் காரணங்கள்

- ஆங்கிலேயரின் நாடு இணைப்புக் கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.
- வெல்லெஸ்லி பிரபு அறிமுகப்படுத்திய **துணைப்படைத் திட்டம்**
- டல்ஹௌசி பிரபு அறிமுகப்படுத்திய **வாரிசு இழப்பு கொள்கை**
- ஆங்கிலேயர்களால் இணைக்கப்பட்ட அரசுகள் **சதாரா**, **நாக்பூர்**, **ஜான்சி**, **அயோத்தி**
- பிரிட்டிஷ் பேரரசுடன் நீதிக்கு புறம்பான வகையில் இணைத்துக் கொள்ளப்பட்ட **பர்மா**, **அசாம்**, **குடகு**, **சிந்து**, **பஞ்சாப்** போன்றப் பகுதிகளில் பிரிட்டிஷ் எதிர்ப்பு உணர்வு அதிகமாகக் காணப்பட்டது.
- வாரிசு இழப்புக் கொள்கையும் அதனை டல்ஹௌசி பிரபு நடைமுறைப்படுத்திய விதமும் புரட்சிக்கு காரணமாக அமைந்தது.
- முகலாய வம்சத்தின் கடைசி பேரரசரான இரண்டாம் பகதூர்ஷாவின் வாரிசுகளிடம் அரண்மனை மற்றும் செங்கோட்டையை ஆங்கில அரசிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறினர்.
- இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகன் நானாசாகிப்பின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது.
- முஸ்லீம்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை இழந்ததாக கருதினர்.

### 2. நிர்வாக காரணங்கள்

- நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்கு பதில் ஆங்கிலம் கொண்டு வரப்பட்டது.
- நீதி வழங்கும் முறை அதிக செலவுடையதாகவும், இயந்திர தன்மையாகவும் மற்றும் காலவிரயம் உடையதாகவும் இருந்தது.
- அதிக பாதிப்பை ஏற்படுத்தியது நிலவரி
- நிலப்பிரபுக்களும், குடியானவர்களும் அதிக நிலவரி செலுத்தினர்.
- அரசியலிலும், ராணுவத்திலும் இந்தியர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படவில்லை.
- படித்த இந்திய இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை.

### 3. பொருளாதார காரணங்கள்

- இந்திய கைத்தொழில்கள் அழிந்தன.
- இந்திய பொருள்களுக்கு இங்கிலாந்தில் அதிகவரி மற்றும் ஆங்கிலேய பொருள்களுக்கு இந்தியாவில் குறைந்த வரி விதிக்கப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

- நெசவாளர்கள் மற்றும் கைவினை கலைஞர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டதால் தொழில் மீது ஆர்வம் குறைந்தது.
- நெசவு தொழில் அழிந்து வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டது.
- பெண்டிங் பிரபு **வங்காள நில குத்தகை சட்டத்தை** கொண்டு வந்தார்.
- 19ம் நூற்றாண்டின் முதல் பாதியில் **ஏழு பஞ்சங்கள்** ஏற்பட்டன.
- 1833ஆம் ஆண்டு **புதிய பண்ணை முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- வங்காளம் மற்றும் பீகார் பகுதிகளில் **அவுரிச்செடி பண்ணைகளில்** இருந்த குடியானவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

### 4. சமூக சமய காரணங்கள்

- மேலை நாட்டு கல்வி முறை பழமை வாதிகளை பீதியடையச் செய்தது.
- சதி, பெண் சிசுகொலை, விதவை மறுமணம் ஆகியவற்றை ஒழித்ததால் ஆங்கில அரசு தங்களின் சமய பழக்கங்களில் தலையிடுவதாக இந்துக்கள் கருதினர்.
- கிறிஸ்துவர்களாக மதம் மாறியவர்களுக்கு மட்டுமே முன்னோர்களின் சொத்துகளில் உரிமை என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.
- கோவில், மசூதி ஆகியவற்றிற்கு சொந்தமான நிலங்களின் மீது அதிக வரிவிதித்தல்.

### 5. இராணுவ காரணங்கள்

- 1806ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் கலகமானது 1857ஆம் ஆண்டு கலகத்திற்கு முன்னோடியாக விளங்கியது,
- அயல்நாடுகளில் சென்று பணியாற்றும் போது அளிக்கப்பட்டு வந்த இரட்டைப்படி முறை இரத்து செய்யப்பட்டது.
- ராணுவத்தில் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட உயரிய பதவி **சுபேதார்.**
- சுபேதாரின் ஊதியம், புதிய ஆங்கில சிப்பாயின் ஊதியத்தைவிட குறைவு.
- கானிங்பிரபு 1856ம் ஆண்டு **பொது இராணுவ பணியாளர் சட்டத்தை** கொண்டு வந்தார். இச்சட்டத்தின்படி இந்திய வீரர்கள் கடல் கடந்து சென்று பணிபுரிய வேண்டும்.
- இந்திய, ஆங்கில படைவீரர்கள் 5:1 என்ற விகிதத்தில் இருந்தனர்.
- இந்திய சிப்பாய்களின் கட்டுப்பாட்டில் இருந்த நகரங்கள் டெல்லி, அலகாபாத்

### 6. உடனடிக் காரணம்

- புதிய **என்பீல்டு ரக** துப்பாக்கிகள் அறிமுகம்.
- கொழுப்பு தடவிய தோட்டாக்கள் **பன்றி/பசுவின்** கொழுப்பால் ஆனது என்ற வதந்தி பரவியது.
- புதிய தோட்டாக்களை உபயோகிப்பது தங்களின் சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது என முஸ்லீம் மற்றும் இந்துக்கள் கருதினர்.
- மங்கள் பாண்டே மார்ச் 29, 1857 ஆம் ஆண்டு **பராக்பூரில்** தோட்டாக்களை பயன்படுத்த மறுத்து கிளர்ச்சியில் ஈடுபட்டார்.
- உயர் அதிகாரி கட்டாயப்படுத்தவே அவரை சுட்டுக்கொன்றார்.
- மங்கள் பாண்டேவை கைது செய்து விசாரணை நடத்தி தூக்கிலிட்டனர்.
- 1857ஆம் ஆண்டு மே திங்கள், **3வது படைப்பிரிவைச் சேர்ந்த** 85 **சிப்பாய்கள்** தோட்டாக்களை பயன்படுத்த மறுத்ததற்கு நீண்ட சிறைதண்டனை வழங்கப்பட்டது.
- புரட்சியின் போது **மீரட்டி**லிருந்த ஆங்கில படைத் தளபதி **ஹுவட்**
- 1857ஆம் ஆண்டு மே 12ம் நாள் படைவீரர்களால் **டெல்லி** கைப்பற்றப்பட்டது. அப்போதைய ஆங்கில படைத் தளபதி **லெப்டிணன்ட் வில்டாஷ்பி**.



Free TN Books | www.freetnbooks.com

- பராக்பூர் படைபிரிவு மீரட்டிற்கு இடம் மாற்றப்பட்டது.

### ஜான்சிராணி

- கங்காதராவின் மனைவி **ராணி லட்சுமிபாய்** இக்கலகத்திற்கு பெரும்பங்காற்றினார்.
- டல்ஹௌசி பிரபுவினுடைய வாரிசு இழப்புக் கொள்கையால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்.
- ஜான்சிராணியும், தாந்தியாதோப்பும் சேர்ந்து குவாலியரை கைப்பற்றினர்.
- 1858ஆம் ஆண்டு ஏப்ரல் 3ம் நாள் சர் ஹோரோஸ் தாந்தியாதோப்பை முறியடித்து ஜான்சியை வீழ்த்தினர்.
- 1858ஆம் ஆண்டு ஜுன் 17ம் நாள் ராணிலட்சுமிபாய் போர்களத்தில் மரணமடைந்தார்.

### பீகார்

- அயோத்திக்கு அருகிலுள்ள ஜக்தீஷ்பூரின் ஜமீன்தார் கன்வர்சிங் பிரிட்டிஷ் ஆட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டார்.
- 1858ஆம் ஆண்டு தான் இறக்கும் வரை வீரத்துடன் போரிட்டார்.
- கன்வர்சிங் 1858ஆம் ஆண்டு ஏப்ரல் 27ம் நாள் இயற்கை எய்தினார்.
- இவருக்குப்பின் அவருடைய சகோதரர் அமர்சிங் புரட்சிக்கு தலைமைதாங்கினார்.

### புரட்சி பரவுதல் மற்றும் அடக்கப்படுதல்

- முதலில் புரட்சி வெடித்தது இடம் - பராக்பூர், ஆனால் உடனடியாக அடக்கப்பட்டது.
- வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டவர்கள் - மீரட் படைப்பிரிவினர் (மே 1857)
- புரட்சி பரவிய இடங்கள் - **டெல்லி**, **லக்னோ**, **பரெய்லி**, **கான்பூர்**, **ஆக்ரா**, **ஜான்சி**, **பனாரஸ்**, **மத்திய இந்தியா**, **பண்டல்கண்டு**

| வ.எண் | இடம் | தலைவர் | அடக்கியவர் | தலைவரின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | டில்லி | இரண்டாம் பகதூர் ஷா | வில்சன், நிக்கல்சன் மற்றும் லாரன்ஸ் | ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டவர் 1862ல் மறைந்தார். |
| 2. | கான்பூர் | நானா சாகிப் படைத்தளபதி தாந்தியாதோப் | காலின் காம்ப்பெல் | நேபாளத்திற்கு தப்பி ஓடினார் |
| 3. | லக்னோ | பேகம் ஹஸ்ரத்மகால் | காலின் காம்ப்பெல் | -. |
| 4. | மத்திய இந்தியா | ஜான்சிராணி இலட்சுமி பாய், படைத்தளபதி தாந்தியாதோப் | ராஸ் | போரில் மரணம் |
| 5. | பீகார் (ஜகதீஸ்பூர்) | கன்வர்சிங் மற்றும் அமர்சிங் | - | மன்னிப்பு |
| 6. | பரெய்லி | கான் பகதூர் கான் | - | போரில் மரணம் |



Free TN Books | www.freetnbooks.com

## தோல்விக்கான காரணங்கள்

- புரட்சியாளர்களிடையே ஒற்றுமையில்லை.
- நாடு முழுவதும் புரட்சி பரவவில்லை. வட இந்தியாவில் மட்டுமே புரட்சி நடந்தது.
- மன்னர், ஜமீன்தாரர்கள் பங்கேற்கவில்லை.
- படித்த இந்தியர்கள் ஆதரிக்கவில்லை.

- ஆங்கிலேயர்களின் விரைவான தகவல் பரிமாற்றம் ( தந்தி, தபால்துறை )
- ஆங்கிலேயர்களின் நவீன போர்க் கருவிகள்
- திட்டமிடப்பட்ட நாளுக்கு (மே31, 1857) முன்னதாக தொடங்கிய புரட்சி.
- சரியான தலைமைப் பண்பு இல்லாமை.
- புரட்சியாளர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

## புரட்சியின் விளைவுகள்

- இந்திய ஆட்சியில் மாற்றங்களை கொண்டு வந்தது.
- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவு (ம) ஆங்கில அரசின் நேரடி ஆட்சி
- கட்டுபாட்டுக் குழு, இயக்குநர் குழு கலைப்பு (1858)
- நிர்வாக பொறுப்பை கவனிக்க இந்திய செயலர் மற்றும் 15 உறுப்பினர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டது
- இந்திய தலைமை ஆளுநர் **வைஸ்ராய் ( அசரப்பிரதிநிதி)** என அழைக்கப்பட்டார்.
- தத்தெடுக்கும் உரிமை, பண்பாடுகளை மதித்தல், ராணுவம் ஆகியவற்றில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது.
- தகுதி, திறன் அடிப்படையில் இந்தியர்களுக்கு வேலை கிடைக்கும் என உறுதி கொடுக்கப்பட்டது.

## விக்டோரியா மகாராணி பேரறிக்கை

- 1858 நவம்பர் 1ல் அலகாபாத்தில் **கடைசி தலைமை ஆளுநரும், முதல் வைஸ்ராயுமான** கானிங்பிரபு அவர்களால் வெளியிடப்பட்டது.
- விக்டோரியா மகாராணி பேரறிக்கை இந்திய மக்களின் **மகாசாசனம்** என அழைக்கப்பட்டது.
- பேரரசியின் அறிக்கை இந்திய மக்களின் "**மேக்னா கார்ட்டா**" (உரிமை சாசனம்) என அழைக்கப்பட்டது.
- இந்தியாவின் ஆட்சி பொறுப்பை இனி இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.
- எனவே, அவருக்கு பதில் அவருடைய பிரதிநிதி இந்தியாவின் ஆட்சி பொறுப்பை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் மதிக்கப்படும் என கூறப்பட்டது.
- ஆங்கிலேயரின் மரணத்திற்கு காரணமாணவர்களை தவிர அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.
- 1858 ஆம் ஆண்டு கானிங் பிரபு முதல் அரசபிரதிநிதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.



Free TN Books | www.freetnbooks.com

### இந்திய கவுன்சில் சட்டம் (1861)

- 1861ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம் தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவிலிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 லிருந்து 5 ஆக உயர்த்தப்பட்டது.
- இதில் 6 முதல் 12 கூடுதல் உறுப்பினர்கள் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுவர்.
- இந்த உறுப்பினர்களின் பணி **சட்டம் இயற்றுவது** மட்டுமே. நிர்வாகக் குழுவில் தலையிட இவர்களுக்கு உரிமை இல்லை.
- மாகாணங்களில் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 முதல் 8 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

### இந்திய கவுன்சில் சட்டம் (1892)

- 1892ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய கவுன்சில்கள் சட்டத்தை **இந்திய தேசிய காங்கிரசுக்கு கிடைத்த முதல் வெற்றி** என்று கருதப்பட்டது.
- மத்திய சட்டமன்றத்தில் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 10 என்றும், அதிகபட்சம் 16 என்றும் நிர்ணயிக்கப்பட்டது..
- அரசின் வரவு செலவு அறிக்கை மற்றும் நிதிக் கொள்கையை பற்றி விவாதிக்க கூடுதல் உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

### லிட்டன் பிரபு

- இவரை பிரிட்டிஷ் பிரதமர் **டிஸ்ரேலி** இந்திய வைஸ்ராயாக நியமித்தார்.
- பஞ்சக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.
- **சர் ரிச்சர்டு ஸ்ட்ரோச்** தலைமையில் **முதலாவது பஞ்சக்குழு** (1878 -1880) ஏற்படுத்தப்பட்டது.
- 1883 ஆம் ஆண்டு பஞ்சங்கள் குறித்த சட்டத் தொகுப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1878 ஆம் ஆண்டு **நாட்டு மொழி செய்திதாள் சட்டம்** நிறைவேற்றப்பட்டது.
- பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் **ஒரே மாதிரியான உப்புவரி**யை அறிமுகப்படுத்தினார்.
- 1878 ஆம் ஆண்டு இந்தியர்க்கு என ஆட்சி பணித்துறை நிறுவப்பட்டு பின்னர் கலைக்கப்பட்டது.
- யாகூப்கான் ஆட்சியாளருடன் **கண்டமக் உடன்படிக்கை** செய்து கொண்டார்.
- நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம் கொண்டு வந்தார். இச்சட்டம் இவருக்கு தீராத அவப்பெயரை தேடித்தந்தது.

### ரிப்பன்பிரபு

- லிபரல் கட்சி பிரதமரான **கிளாட்ஸ்டன்** என்பவரால் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார்.
- 1882ஆம் ஆண்டு **தலசுய ஆட்சியை** அறிமுகப்படுத்தினார்.
- உட்ஸ் அறிக்கையின் அடிப்படையில் இந்திய கல்வி முறையின் செயல்பாட்டை ஆய்வு செய்தார்.
- 1882ஆம் ஆண்டு சர் வில்லியம் ஹண்டர் தலைமையில் குழு ஒன்றை அமைத்தார்.
- மக்களின் தொடக்க கல்வியை மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும் என இக்குழு பரிந்துரை செய்தது.
- 1881ஆம் ஆண்டு **முதல் தொழிற்சாலை சட்டத்தை** நிறுவினார்.
- 1883ஆம் ஆண்டு **இல்பர்ட் மசோதா சட்டத்தைக்** கொண்டு வந்தார்.
- இதன் விளைவாக 1885ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

**கர்சன் பிரபு**

- 1902ஆம் ஆண்டு ஒரு பல்கலைக் கழக குழுவை நியமித்தார்.
- 1904ஆம் ஆண்டு இந்திய பல்கலைக் கழகச் சட்டத்தை கொண்டு வந்தார்.
- 1902ஆம் ஆண்டு சர் ஆண்ட்ரூ பிரேசர் தலைமையில் காவல்துறை குழு ஒன்றை நியமித்தார்.
- 1899ஆம் ஆண்டு கல்கத்தா மாநகராட்சி சட்டத்தை கொண்டு வந்தார்.
- 1904ஆம் ஆண்டு பண்டைய தொல்பொருள் சின்னங்கள் சட்டத்தை கொண்டு வந்தார்.
- 1905ஆம் ஆண்டு **ஜூலை 4ம் நாள் வங்காளத்தை இரு மாநிலங்களாகப்** பிரித்தார்.
- புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்கு வங்காளத்தின் தலைநகராக **டாக்கா**வை அறிவித்தார்.



Free TN Books | www.freetnbooks.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய வரலாறு**

**பகுதி : இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு



Free TN Books | www.freetnbooks.com

# இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு

- இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றியது.
- 1800- ஆம் ஆண்டு முதல் தமிழர்களின் பல புரட்சிகள் இந்தியா சுதந்திரம் அடைய வழிவகை செய்தது.
- 1801ஆம் ஆண்டு நடைபெற்ற தென்னிந்தியக் கலகத்திற்கு தலைமை ஏற்றவர்கள் மருது சகோதர்கள் ஆவார்கள்.
- 1806ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகம் இந்திய தேசிய இயக்கம் தோன்ற காரணமாக அமைந்தது.
- 1792ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கை பிரிட்டிஷாருக்கு பாளையக்காரர்கள் கப்பம் கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
- தெலுங்கு பாளையக்காரர்களாகிய கட்டபொம்மன் **3310** பகோடா நிலுவை வைத்தார். இதன் காரணமாக 1798ஆம் ஆண்டு ஜான்சன் மூலம் இராமநாதபுரத்தில் சிறை வைக்கப்பட்டார். அதன் பிறகு சிறையில் இருந்து தப்பினார்.
- மருது பாண்டியர் திருச்சியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அவ்வறிக்கை ஆங்கிலேயருக்கு எதிராக இருந்ததால் கட்டபொம்மன் மருது பாண்டியர்களோடு இணைந்தார்.
- கட்டபொம்மன் **1799ஆம் ஆண்டு அக்டோபர் 16**ல் தூக்கிலிடப்பட்டார்.
- புலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுதம்பி போன்ற மாபெரும் தலைவர்கள் முக்கிய பங்காற்றினர்.
- ஜி.சுப்பிரமணிய அய்யர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, சி.இராசகோபாலாச்சாரி, பெரியார், ஈ.வெ.ராமசாமி, திருப்பூர் குமரன், கே.காமராஜ் போன்றோர் சமூக சீர்த்திருத்தவாதிகள் பங்காற்றினார்.

**வேலூர் கலகம் (கி.பி.1806)**

- சிப்பாய் புரட்சிக்கு முன்பு வெள்ளையர்களுக்கு எதிராக நடந்த முதல் புரட்சி வேலூர் புரட்சி
- இது இந்தியாவின் **முதல் சுதந்திரப்போர்**
- **ஜீலை 10, 1806ஆம்** ஆண்டு வேலூர் புரட்சி நடைபெற்றது.
- வேலூர் கோட்டையில் திப்புசுல்தானுடைய வாரிசுகளும், உறவினர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- இந்திய சிப்பாய்களில் இந்துகளும், முஸ்லீம்களும் அடங்குவர்.
- இந்திய சிப்பாய்கள் திப்பு சுல்தானுடைய வாரிசுகளை அரியணையில் அமர்த்த எண்ணினர்.
- திப்பு சுல்தானுடைய குடும்பங்களுக்கு விசுவாசமானவர்கள் **முகம்மதியர்கள்**
- இவர்கள் பக்கீர்களைப் போல வேடமிட்டு கிராமம் கிராமமாகச் சென்று **பொம்மலாட்டம்** நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்கு சுதந்திர உணர்வை ஊட்டினர்
- சென்னை மாநில ஆங்கிலப் படை தளபதி **ஜன்ரடாக் என்பவர் சிப்பாய்களுக்கு புதிய தோள் தொப்பியை** அறிமுகப்படுத்தினார்.
- இத்தொப்பி **மாட்டுத் தோலால்** செய்யப்பட்டது. இதில் மாட்டின் கொழுப்பு மற்றும் பன்றியின் கொழுப்பு பூசப்பட்டிருந்ததால் இந்துகளும், முஸ்லீம்களும் இதனை உபயோகப்படுத்த மறுத்தனர்.
- **வீபூதி**, **நாமம்** தரிக்கக் கூடாது. **மீசையை** ஒரே அளவாக வெட்டிக் கொள்ள வேண்டும். தாடி வளர்க்காமல் ஒட்ட மழிக்க வேண்டும் என கூறப்பட்டது.
- கிருஸ்துவ மதத்தில் தங்களை மாற்றவே இந்த முயற்சிகள் என்று சிப்பாய்கள் கருதினர்.
- திப்பு சுல்தானின் குடும்பத்திற்கு பாதுகாவலாக இருந்தவர் - **லெப்பினெண்ட் கர்னல் மேரியேட்**
- இந்திய சிப்பாய்கள், **சுபேதார் ஷேக் காதம், ஷேக் காசிம், சுபேதார் ஷேக் ஹீசைன்** போன்றோர் தலைமையில் சிப்பாய்கள் அணிவகுத்து ஆங்கிலேயரை தோற்கடித்தனர்.
- **கட்டாய தலைபாகையை** அமுல்படுத்திய **கர்னல் மிக்கிராகீம்** சுட்டுக்கொல்லப்பட்டார்.
- வேலூர் புரட்சி வெடித்த போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் லார்ட் வில்லியம் பென்ஸ், மாநில முதன்மை படைத் தளபதி **சர்காண் ரடாக்** பதவியிலிருந்து பிரிட்டன் அரசால் நீக்கப்பட்டார்.
- வேலூர் கலகத்தின் தொடர்ச்சியே **சிப்பாய்க் கலகம் என்றவர் கே.கே.பிள்ளை**



Free TN Books | www.freetnbooks.com

- வேலூர் கலகம், **சிப்பாய் கலகத்தின் முன்னோடி என்றவர்- சவார்க்கர்**.
- பெரும் கலகத்திற்கு **தமிழர்களே முன்னோடி என்றார் என்.சஞ்சீவி**,
- மருது சகோரர்களின் தொடர்ச்சியே **வேலூர் கலகம் என்றார் ராசைய்யா**.
- 1857ஆம் ஆண்டு நடந்த புரட்சியே **முதல் விடுதலைப்போர் என்றவர் வீர சவார்க்கர்**.

**சென்னை சுதேசி சங்கம் (1852)**

- சென்னை மகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம்.
- 1852ல் கார்லி, லஷ்மி நரசுசெட்டி மற்றும் சீனிவாசப்பிள்ளை ஆகியோரால் சென்னை சுதேசி சங்கம் நிறுவப்பட்டது
- இச்சங்கம் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் கொள்கைகளை விமர்சித்தது.

**சென்னை மகாஜன சபை**

- 1884ஆம் ஆண்டு சென்னை சுதேச சங்கம் சென்னை மகாஜன சபையுடன் இணைக்கப்பட்டது.
- சென்னை மகாஜன சபையினை எஸ்.ராமசாமி முதலியார், பி.ஆனந்த சாருலு மற்றும் பி.ரங்கையநாயுடு ஏற்படுத்தினார்.
- சென்னை அண்ணா சாலையில் இந்து பத்திரிக்கை அலுவலகத்தில் சென்னை மகாஜன சபை செயல்பட துவங்கியது.
- சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் **பி.ரங்கையா நாயுடு**.
- 1895ம் ஆண்டு டிசம்பர் மாதம் **இந்திய அரசுப் பிரதிநிதி எல்ஜின்பிரபு** சென்னைக்கு வந்தார்.
- சென்னை மகாஜன சபையின் வரவேற்புரையை ஏற்க மறுத்தார்.
- சென்னை மகாஜன சபை 1920ஆம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டது.
- 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 22 உப்புசத்தியாகிரக போராட்டத்தை சென்னை ஜார்ஜ்டவுன், யானைகவுனி, உயர்நீதிமன்றம் மற்றும் கடற்கரைப்பகுதியில் தலைமை ஏற்று நடத்தியது.
- இதன் உறுப்பினர்கள் போராட்டத்தின்போது கடுமையாக தாக்கப்பட்டனர்.
- இதனை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நீதிபதி **டி.ஆர்.இராமச்சந்திர அய்யர்** தலைமையில் அமைக்கப்பட்டது.
- பொருட்காட்சிகள், அனைத்திந்திய காதிக் கண்காட்சி மற்றும் சுதேசி பொருட்கள் கண்காட்சி மூலம் மக்கள் மனதில் தேசப்பற்றை வளர்த்தது.
- **1896 அக்டோபர் 24ம்** நாள் தேசத்தந்தை மகாத்மா காந்தி சென்னை மகாஜன சபையில் உரையாற்றினார்.
- இச்சபையின் பொன்விழாவில் ஜவர்ஹர்லால் நேரு கலந்து கொண்டார்.

**இந்திய தேசிய காங்கிரஸ்:**

- இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885ஆம் ஆண்டு நடைபெற்றது. இதில் **72** பேர் கலந்து கொண்டார்கள். இதில் **16** பேர் தமிழர்கள். **16** பேரும் சென்னை மகாஜன சபை சார்பில் கலந்து கொண்டனர்.
- 1887ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மூன்றாவது மாநாடு சென்னையில் பத்ருதீன் தியாப்ஜி தலைமையில் நடைபெற்றது.
- தமிழகம் சார்பில் இதுவரை 2 பேர் சுதந்திரத்திற்கு முன் இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்களாக இருந்து உள்ளனர்.
- 1920 நாக்பூர் மாநாட்டில் **விஜயராகவாச்சாரியும்**, 1926 கௌகாத்தி மாநாட்டில் **எஸ்.சீனிவாச ஐய்யங்காரும்** தமிழகத்தை சேர்ந்த தலைவர்கள்.



Free TN Books | www.freetnbooks.com

| தமிழக மிதவாதிகள் | தமிழக தீவிரவாதிகள் |
|---|---|
| **விஜயராகவாச்சாரி (தமிழக மிதவாதத்தின் தந்தை)** ராஜாஜி, நடேச முதலியார், வரதராஜுலு நாயுடு, எஸ்.சீனிவாச ஐய்யங்கார், ஈ.வெ.ரா.பெரியார் | வ.உ.சி சுப்பிரமணிய சிவா, பாரதி, வ.வே.சு நீலகண்ட பிரம்மசாரி, வாஞ்சிநாதன் |

**தமிழகத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளின் இடங்கள் மற்றும் தலைவர்கள்**

| ஆண்டு | தலைவர்கள் |
|---|---|
| 1887 | பத்ருதீன் தயாப்ஜி |
| 1894 | ஆல்பிரெட் வெப் |
| 1898 | ஆனந்த் மோகன் போஸ் |
| 1903 | லால்மோகன் கோஷ் |
| 1908 | ராஷ்பிஹாரி கோஷ் |
| 1914 | பூப்பேந்திரநாத் போஸ் |
| 1927 | எம்.ஏ அன்சாரி |

**வ.உ. சிதம்பரம் பிள்ளை.**

- செப்டம்பர் 5, 1872ஆம் ஆண்டடு **ஒட்டப்பிடாரத்தில்** பிறந்தார்.
- செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்பட்டார்.
- திருநெல்வேலி வழக்கறிஞராக பணியாற்றினார்.
- சுதேசி தர்ம சங்கம், நெசவாளிகள் சங்கம் மற்றும் கூட்டுறவு அங்காடிகளை தோற்றுவித்தார்.
- சுதேசி கப்பல் நிறுவனம் தொடங்கி **தூத்துக்குடி முதல் கொழும்பு வரை** கப்பல் போக்குவரத்து தொடங்கினார்.
- 1905 வங்காள பிரிவினை இவரை அரசியலில் ஈடுபடச் செய்தது.
- 1907ஆம் ஆண்டு நடந்த சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1907ஆம் ஆண்டு சூரத் பிளவிற்கு பிறகு வ.உ.சியும், மற்ற தேசியவாதிகளும் இணைந்து சென்னை ஜனசங்கத்தை தோற்றுவித்தனர்.
- 1908ஆம் ஆண்டு மார்ச் திங்களில் **திருநெல்வேலி கலகம்** நடைபெற்றது. சுப்பிரமணிய சிவா இவருக்கு உறுதுணையாக செயல்பட்டார்.
- மிதவாதிகளும், தீவிரவாதிகளும் சூரத் மாநாட்டில் இரண்டாகப் பிரிந்தனர்.
- வ.உ.சி பாலகங்காதார திலகரை தீவிரமாக ஆதரித்தார்.
- தமிழகத்தில் காங்கிரசின் கொள்கையை தீவிரமாக பரப்பினார்.
- இவர் மீது தேச துரோகம் குற்றம் சுமத்தப்பட்டு **40** ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார்.
- இவரின் வலது கால் சங்கிலியால் கட்டப்பட்டு மாடு போல் சிறையில் செக்கிழுத்தார்.

**சுப்பிரமணியசிவா**

- திண்டுக்கல் மாவட்டம் **வத்தலகுண்டு** கிராமத்தில் பிறந்தார்.
- சிறந்த விடுதலை போராட்ட வீரர், எழுத்தாளர்.
- தொழு நோயால் பாதிக்கப்பட்டு **சேலம்** சிறைக்கு மாற்றப்பட்டார்.
- தொழுநோயாளிகள் **இரயில் வண்டியில்** பயணம் செய்யக் கூடாது என்று ஆங்கிலேய அரசு புதிய சட்டம் கொண்டு வந்தது.
- இவர் நோயின் காரணமாக ஜுலை 23, 1925ல் இயற்கை எய்தினார்.



Free TN Books | www.freetnbooks.com

### சுப்பிரமணிய பாரதியார்.

- தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் டிசம்பர் 11, 1882ம் ஆண்டு பிறந்தார்.
- 1904ஆம் ஆண்டு **மதுரையில்** தமிழ் ஆசிரியராக பணியாற்றினார்.
- **சுதேசமித்திரன்** பத்திரிக்கையில் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.
- 1907ல் சூரத் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- **பாலபாரதம்** என்ற ஆங்கில பத்திரிக்கையை வெளியிட்டார்.
- **இந்தியா** என்ற தமிழ் வார இதழின் ஆசிரியராக இருந்தார்.
- **சுதேச கீதங்கள்** என்ற தேசிய பாடல் இவரால் எழுதப்பட்டது.
- 1908 சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார்.
- இவரது பாடல்கள் வந்தே மாதரம், அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்றவைகளை அச்சிட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கினார்.
- 1908ஆம் ஆண்டு வ.உ.சிக்கு எதிரான வழக்கில் வ.உ.சிக்கு ஆதரவாக சாட்சி வழங்கினார்.
- 1909ஆம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது.
- 1918ஆம் ஆண்டு **கடலூரில்** கைது செய்யப்பட்டார்.
- 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ல் இயற்கை எய்தினார்.

### வாஞ்சிநாதன்

- திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றினார்.
- இவருடைய செயல்பாடு ஆங்கிலேய அரசை அச்சுறுத்தியது.
- ஆங்கிலேய அதிகாரியாக இருந்த **திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆஷ்** என்பவர் நான்கு பேரை சுட்டுக் கொன்றார்.
- மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் **1911 ஜூன் 17ம்** நாள் மாவட்ட ஆட்சியர் ஆஷ் அவர்களை சுட்டுக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார்.
- இவர் எழுதிய கடிதத்தில் ஆட்சியர் ஆஷின் கொலை சென்னை வரும் அரசர் **ஐந்தாம் ஜார்ஜை** கொலை செய்வதற்கான ஒத்திகையாகும் என்று எழுதப்பட்டு இருந்தது.

### திருப்பூர் குமரன்

- ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் 1904ம் ஆண்டு பிறந்தார்.
- தேசியக் கொடி தடைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு காவல் துறையின் தாக்குதலால் உயிர் துறந்தார்.
- சாகும் தருவாயில் தேசியக் கொடியை கையில் ஏந்தியபடி தனது தேசப்பற்றை வெளிப்படுத்தினார்.
- இதனால் கொடிகாத்த குமரன் என அழைக்கப்படுகிறார்.

### எஸ்.சத்தியமூர்த்தி

- 1887ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் நாள் **திருமயம்** என்னும் ஊரில் பிறந்தார்.
- **காமராசரின் அரசியல் குரு**
- சிறந்த அரசியல்வாதி நாட்டுபற்றாளர்.
- **இராஜகோபாலாச்சாரியார்** சத்திய மூர்த்தியை அகில இந்தியா காங்கிரஸ் தமிழ்நாட்டு பிரிவின் தலைவராக்கினார்.
- 1939ஆம் ஆண்டு **சென்னை மேயராக** இருந்தார்.
- 1919ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாண்டேகு சேம்ஸ் போர்டு சீர்திருத்தம் மற்றும் ரௌலட் சட்டத்தை எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கூட்டுக் குழுவின் உறுப்பினர்.
- 1939ஆம் ஆண்டு சென்னைக்கு மேற்கே 50கி.மீ தூரத்தில் உள்ள **பூண்டி** என்னும் இடத்தில் **குடிநீர் தேக்கம் கட்ட** ஏற்பாடு செய்தார்.



Free TN Books | www.freetnbooks.com

- இந்த **குடிநீர் தேக்கம் காமராசர்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- **சத்திய மூர்த்தி சாகர்** என்று இந்நீர் தேக்கத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் நினைவாக தமிழ்நாடு **காங்கிரஸ் கமிட்டி தலைமையிடத்திற்கு சத்திய மூர்த்தி பவன்** எனப் பெயரிடப்பட்டது.
- 1943ஆம் ஆண்டு மார்ச் 28ல் இயற்கை எய்தினார்.

**சி.இராஜகோபாலாச்சாரியார்**.

- டிசம்பர் 10, 1878ஆம் ஆண்டு **தொரப்பள்ளி** என்ற கிராமத்தில் பிறந்தார்.
- 1906ஆம் ஆண்டு **கல்காத்தா**வில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1907ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1930ஆம் ஆண்டு **வேதாரண்யம் சத்தியாகிரகத்தை** தலைமை ஏற்று நடத்தினார்.
- தமது தலைமையில் திருச்சியிலிருந்து **100** தொண்டர்களுடன் வேதாரண்யத்திற்கு பயணம் மேற்கொண்டு கடல்நீரிலிருந்து உப்புகாய்ச்சி உப்புச்சட்டங்களை மீறினார்.
- 1937ஆம் ஆண்டு **சென்னை மாகாண முதலமைச்சர்** ஆனார்.
- தமது ஆட்சி காலத்தில் மதுவிலக்கை அமல்படுத்தினார்.
- இந்தி மொழியை கட்டாய பாடமாக பள்ளியில் அறிமுகப்படுத்தினார்.
- பெரியார் ஈ.வே.ரா தலைமையில் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது.
- **1939**ஆம் ஆண்டு தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் செனரல்.
- 1952ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சரானார்.
- **குலக்கல்வி திட்டத்தைக் கொண்டு வந்தார்.**
- காமராஜர், பெரியார் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் **1954**ஆம் ஆண்டு முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.
- காங்கிரஸில் இருந்து வெளியேறினார்.
- **இளம் இந்தியா** என்ற பத்திரிக்கையை தொடங்கினார்.
- **சக்கரவர்த்தினி திருமகள்** (இராமாயணம்), **வியாசர் விருந்து** (மகாபாரதம்) போன்றவை இவரின் உரைநடைநூல் ஆகும்.
- **1955**ஆம் ஆண்டு **பாரதரத்னா** விருது பெற்றார்.
- 1972ஆம் ஆண்டு டிசம்பர் 25ல் இயற்கை எய்தினார்.
- **சாணக்கியர்** என்று போற்றப்படுகிறார்.

**காமராஜர்**

- **கர்மவீரர்** என்றும் பெருந்தலைவர் என்றும் மக்களால் போற்றப்படுகிறார்.
- 1903ஆம் ஆண்டு ஜுலை 15ல் **விருதுபட்டி** என்று அழைக்கப்பட்ட **விருதுநகரில்** பிறந்தார்.
- 1924ஆம் ஆண்டு **வைக்கம் சத்தியாகிரக** போராட்டத்தில் ஈடுபட்டார்.
- 1929ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் முழுநேர உறுப்பினர்.
- 1930ஆம் ஆண்டு காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கிய போது இராஜாஜியுடன் சேர்ந்து **தமிழகத்தில் வேதாரண்ய உப்புசத்தியாகிரகத்தை** மேற்கொண்டார்.
- இதன் மூலம் இரண்டாண்டுகள் சிறைதண்டனை பெற்று **அலிபூர்** சிறையில் அடைக்கப்பட்டார்.
- காந்தி- இர்வின் ஒப்பந்ததின்படி விடுவிக்கப்பட்டார்.
- தனது சத்தியகிரகப் போராட்டத்திற்கு காந்தியடிகள் அனுமதி பெற **வார்தா** சென்ற போது போகும் வழியில் கைது செய்யப்பட்டார்.



Free TN Books | www.freetnbooks.com

- 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு திட்டத்தின் போது கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகள் **அமராவதி** சிறையில் அடிக்கப்பட்டார்.
- **1947**ஆம் ஆண்டு இந்தியா விடுதலையான போது **சத்தியமூர்த்தி வீட்டில் தேசிய கொடியை பறக்கவிட்டார்.**
- இவர் தமிழக முதல்வராக 9 ஆண்டுகள் பணியாற்றினார்.
- **அரசை உருவாக்குபவர்** எனப் போற்றப்பட்டார்.
- 1964ஆம் ஆண்டு லால்பகதூர் சாஸ்திரியை இந்திய பிரதமராக்கினார்.
- 1966ஆம் ஆண்டு இந்திராகாந்தியை இந்திய பிரதமாக்கினார்.
- காமராஜர் திட்டம் (**கே.திட்டம்**) என்ற திட்டத்தின்படி கட்சிப் பணிக்காக தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- அக்டோபர் 2ம் நாள் 1975ம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**தன்னாட்சி இயக்கம் (1916)**

- **திலகர்** 1916ம் ஆண்டு தன்னாட்சி கழகத்தை **மும்பை**யில் நிறுவினார்.
- அயர்லாந்தை சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையார் **சென்னை**யில் இதன் கிளையை நிறுவினார்.
- இவ்விரு அமைப்புகளும் சேர்ந்து இந்தியர்கள் **தன்னாட்சி மற்றும் சுயஆட்சி** பெறுவதற்கு பிரச்சாரம் செய்தனர்.
- அன்னிபெசன்ட் அம்மையார் நடத்திய **நியூஇந்தியா** பத்திரிக்கை ஆங்கிலேய அரசால் தடைசெய்யப்பட்டது.
- **மோதிலால் நேரு** மற்றும் **சி.ஆர். தாஸ் தன்னாட்சி** இயக்கத்திற்கு முழு ஆதரவை தந்தனர்.

**ரௌலட் சத்யாகிரகம் (1919)**

- 1919ஆம் ஆண்டு மார்ச் 17ல் தமிழகம் வந்த காந்தியடிகள் கஸ்தூரி ரங்க ஐயங்கார் வீட்டில் ரௌலட் சட்டத்தை எதிர்த்து திட்டம் ஒன்றை உருவாக்கினார்.
- இத்திட்டத்தின் தலைவராக காந்தியும், துணை தலைவராக விஜயராகவாச்சாரி டி.பிரகாசமும், செயலாளராக ராஜாஜி, கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆகியோர் பொறுப்பேற்றனர்.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ல் தமிழ்நாட்டில் **ரௌலட் சட்ட எதிர்ப்பு நாள்** அனுசரிக்கப்பட்டது.
- அன்று தடையை மீறி சென்னையில் சத்யாகிரக பத்திரிக்கை வெளியானது.
- காந்தியின் நூல்களான '**சர்வோதயம்**" , 'இந்திய **சுயராஜ்ஜியம்"** விற்பனை செய்யப்பட்டது. இந்நூல்கள் ஆங்கிலேய அரசால் தடைசெய்யப்பட்ட நூல்கள் ஆகும்.

**கிலாபத் இயக்கம்:**

- 1919ல் மாநில காங்கிரஸ் மாநாட்டில் ராஜாஜி, அலி சகோதரர்களை விடுதலை செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- அக்டோபர் 17 **கிலாபத் தினமாக** தமிழகத்தில் அனுசரிக்கப்பட்டது.
- 1920ஆம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் சென்னை நகரில் மௌலானா சவுகத் அலியின் தலைமையில் கிலாபத் மாநாடு நடைபெற்றது.

**ஒத்துழையாமை இயக்கம் :**

- 1919ல் தமிழ்நாட்டில் **ராஜாஜி** தலைமையில் நடைபெற்றது.
- சென்னை தொழிலாளர் யூனியன் சார்பாக பக்கிங்காம் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.
- இந்து, சுதேசமித்திரன், தேசபக்தன், முகமதன் பத்திரிக்கைகள் ஒத்துழையாமை இயக்கத்திற்கு உதவிகரமாக இருந்தது. .



Free TN Books | www.freetnbooks.com

**சுயராஜ்ஜிய கட்சி:**

- தமிழகத்தில் கஸ்தூரி ரங்க ஐய்யங்கார், சீனிவாச ஐயங்கார், வரதராஜுலு நாயுடு ஆகியோர் சுயராஜ்ஜிய கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர்.
- 1928ல் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு 41 இடங்கள் வென்றும் சுப்பராயன் தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது.
- ரங்கசாமி ஐயங்கார், சண்முகர் செட்டியார், எஸ்.சீனிவாச ஐயங்கார் ஆகியோர் சுயராஜ்ஜிய கட்சியின் குறிப்பிடதக்கவர் ஆவர்.

**நீல் சிலை சத்தியாக்கிரகம்:**

- 1857ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியின் போது சென்னை இராணுவ பிரிவின் தலைவராக இருந்தவர் கர்னல் நீல்.
- சென்னையில் மவுண்ட் சாலையில் அவருக்கு சிலை வைக்கப்பட்டது.
- இச்சிலையை அகற்றுவதற்காக நெல்லை **சோமாயஜுலு**வின் தலைமையில் **சத்தியாகிரகக்குழு** துவக்கப்பட்டது.
- செப்டம்பர் 1927ஆம் ஆண்டு நடந்த **நீல் சிலை** அகற்றும் போராட்டத்திற்கு .**காமராஜர்** தலைமை தாங்கினார்.
- 1937ஆம் ஆண்டு **ராஜாஜி** முதல்வரான பின்பு, சிலை அகற்றுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- அச்சிலையை அகற்றி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

**சைமன் குழு புறக்கணிப்பு** :

- 03.02.1928ல் பம்பாயில் வந்திறங்கிய சைமன் குழுவை நாடே எதிர்த்தது.
- தமிழக எதிர்ப்பு போராட்த்திற்கு **சத்திய மூர்த்தி** தலைமை தாங்கினார்.
- சைமன் குழுவை வரவேற்க சுப்பராயன் கலந்து கொண்டதால், ரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார் ஆகியோர் அமைச்சரவையிலிருந்து விலகினார்.

**சட்ட மறுப்பு இயக்கம்:**

- தமிழ்நாட்டில் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13ல் **ராஜாஜி** தலைமையில் **திருச்சி முதல் வேதாரண்யம்** வரை நடத்தப்பட்டது.
- தஞ்சை மாவட்ட ஆட்சியரான **ஏ.ஜெ.தார்ன்** பல வழிகளில் முயன்றும், ராஜாஜி தலைமையிலான குழு வேதாரண்யம் அடுத்த அகஸ்திய பள்ளியில் உப்பளத்திற்கு சென்று, உப்பை எடுக்க முயன்று கைதானார்கள்.
- சென்னையில் டி.பிரகாசம் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.
- சட்ட மறுப்பு இயக்கத்தால் காந்தி கைதை எதிர்த்து, முத்துலட்சுமி ரெட்டி மாநில சட்டமன்ற நியமன உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.
- 1932 ஜனவரி 26ல் சென்னையில் சுயராஜ்ஜிய தினம் கொண்டாடப்பட்டது.
- 1934ல் சட்டமறுப்பு இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டது.

**தனிநபர் சத்தியாகிரகம்:**

- டி.எஸ்.எஸ்.ராஜன் தமிழகத்தில் **முதல் தனிநபர் சத்தியாகிரகத்தை** நடத்தினார்.
- அவரை தொடர்ந்து, ராஜாஜி, சத்தியமூர்த்தி, டி.பிரகாசம், ம.பொ.சிவஞானம் உள்ளிட்ட பல தலைவர்கள் தனிநபர் சத்தியாகிரகத்தில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர்.



Free TN Books | www.freetnbooks.com

## வெள்ளையனே வெளியேறு இயக்கம்

- 1935ஆம் ஆண்டு சட்டப்படி 1937ஆம் ஆண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டது.
- சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றிப் பெற்று சி.ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் அமைச்சரவை பதிவியேற்றது.
- இவரது அமைச்சரவையில் ஒன்பது அமைச்சர்கள் இருந்தனர்.
- இரண்டாம் உலகப்போரின் போது **கிரிப்ஸ் தூதுக் குழு** பரிந்துரைகள் தோல்வியடையவே வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.
- இவ்வியக்கம் 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ல் தொடங்கப்பட்டது
- **தஞ்சை, மதுரை, கோவை** பகுதிகளில் போராட்டம் அதிகம் காணப்பட்டது.

## இந்திய சுதந்திரம் :

- 1947 ஆகஸ்டு 15ல் தமிழகத்தில் **ஓமந்தூர் ராமசாமி** முதலமைச்சராக இருந்தார்.
- இவர் இந்திய விடுதலைச் சட்டத்தைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றினர்.

## இந்திய விடுதலை முன் உருவான கட்சிகள்:

| வ. எண் | கட்சிகள் மற்றும் இயக்கங்கள் | ஆண்டு | துவங்கிய இடம் | துவங்கியவர் |
|---|---|---|---|---|
| 1. | பிரிட்டிஷ் இந்திய கழகம் | 1851 | வங்காளம் | ஹரிஸ் சந்திர முகர்ஜி |
| 2. | பம்பாய் கழகம் | 1852 | மும்பை | தாதாபாய் நவ்ரோஜி |
| 3. | கிழக்கு இந்திய கழகம் | 1856 | லண்டன் | தாதாபாய் நவ்ரோஜி |
| 4. | சென்னை சுதேசி சங்கம் | 1852 | சென்னை | லட்சுமிநரசு செட்டி மற்றும் சீனிவாச பிள்ளை |
| 5. | பூனா சர்வஜன சபை | 1870 | பூனா | G.V.ஜோதி, M.G. ராணடே |
| 6. | சென்னை மகாஜன சங்கம் | 1884 | சென்னை | P.அனந்தசார்லு மற்றும் P. ரங்கையாநாயுடு |
| 7. | இந்திய தேசிய பேரவை | 1883 | கல்கத்தா | சுதேந்திரநாத் பானர்ஜி |
| 8. | இந்திய பணியாளர் கழகம் | 1908 | பூனா | கோகலே |

## முஸ்லீம் சீர்திருத்தம்:

### முகமதிய இலக்கிய கழகம் (1863)

- இக்கழகம் மூலம் பல பள்ளிகள் வங்காளத்தில் துவங்கப்பட்டது.
- இப்பள்ளிகள் ஆங்கில வழி கல்வியை முக்கிய நோக்கமாக இருந்தது.

## அலிகார் இயக்கம்:

- **சர் சையது அகமதுகான்** துவங்கினார்.
- 1864ஆம் ஆண்டு **காசிப்பூர்** என்னும் இடத்தில் சையது அகமது கான் ஒரு பள்ளியை நிறுவினார்.
- 1875ஆம் ஆண்டு **முகமதியன் ஆங்கிலோ ஓரியன்டல்** கல்லூரி நிறுவப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

### நீதிக்கட்சி

- நீதிக்கட்சியின் முன்னோடி **சென்னை ஐக்கிய கழகமாகும்**.
- 1912ஆம் ஆண்டு நவம்பர் சென்னை திராவிட சங்கம் என பெயர் மாற்றப்பட்டது.
- இந்த அமைப்பு வளர்வதற்கு நடேச முதலியார் முக்கிய பங்காற்றினார்
- சென்னை மாகாணத்தில் 20ம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் நீதிகட்சி ஆட்சியில் இருந்தது.
- நீதிகட்சி கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிராமணர்களுடைய ஆதிக்கத்திற்கு எதிராக பிராமணர்கள் அல்லாதவர்களால் தொடங்கப்பட்ட சமூக இயக்கம்
- 1916ஆம் ஆண்டு **தென்னிந்திய நல உரிமை** சங்கம் என அழைக்கப்பட்டது.
- தென்னிந்திய நல உரிமை சங்கம் **ஜஸ்டிஸ்** என்ற பெயரில் ஒரு ஆங்கில மொழி செய்தித்தாளை நடத்தி வந்தது.
- நீதிக்கட்சியை ஆதரித்த மற்றொரு தமிழ் பத்திரிக்கை **திராவிடன்.**
- 1916ஆம் ஆண்டு **டி.எம்.நாயர் , தியாகராஜ செட்டியார், பி.ராமராய நிங்கர் மற்றும் சி. நடேச முதலியார் (பனகல் அரசர்)** ஆகியோரால் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.
- தொடக்கத்தில் கோரிக்கை மனுக்கள் மூலம் பிராமணர் அல்லாதவர்களுக்கு நிர்வாகத்தில் அதிக பிரதிநிதிதுவம் கோரியது.
- **தமிழில் திராவிடன்**, **தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா**, **ஆங்கிலத்தில் ஜஸ்டிஷ்** என்ற பத்திரிக்கைகளை அச்சிட்டு வெளியிட்டது. இதன் மூலம் நீதிக்கட்சி என பெயர்பெற்றது.

### நீதிக்கட்சி ஆட்சி

- 1920ஆம் ஆண்டு தேர்தலில் நீதிகட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றிப்பெற்று சுப்புராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது.
- 1923ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று திரு.பி.எம்.திருஞானம் பிள்ளை தலைமையில் ஆட்சி அமைத்தது.
- 1926ஆம் ஆண்டு தேர்தலில் சுயராஜ்ஜிய கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது.
- சுயேட்சை வேட்பாளர் சுப்புராயலு சுயராஜ்ஜிய கட்சி உதவியுடன் ஆட்சி அமைத்தார்.
- 1930ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று ப.முனுசாமி நாயுடு தலைமையில் ஆட்சி அமைத்தது.
- 1932ஆம் ஆண்டு ப.முனுசாமி நாயுடு பதவி நீக்கம் செய்யப்பட்டு பொப்புலிராஜா பதிவியேற்றார்.
- 1934ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி வெற்றிப்பெற்று ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது. எனவே, நீதிக்கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தது.
- 1937ஆம் ஆண்டு நீதிக்கட்சி தேர்தலில் படுதோல்வி அடைந்தது.
- 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த மாநாட்டில் பெரியார் நீதிகட்சியின் பெயரை திராவிடக் கழகம் என மாற்றம் செய்து சமுதாய இயக்கமாக மாற்றினார்.

### நீதிக்கட்சி ஆட்சியின் சாதனைகள்

- சமூக அரசாணை 1921 மற்றும் 1922 மூலம் பார்பணர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.
- 1924ஆம் ஆண்டு பணியாளர் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தியது.
- 1929ஆம் ஆண்டு பொதுப்பணியாளர் தேர்வாணையமாக மாறியது.
- 1925ஆம் ஆண்டு **ஆந்திரப் பல்கலைக்கழகம்**, 1929ஆம் ஆண்டு **அண்ணாமலை பல்கலைக்கழகம்** தொடங்கப்பட்டது.
- 1926ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1921ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1922ஆம் ஆண்டு அரசாங்க தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

- இக்காலத்தில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது
- ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் தியாகராய செட்டியாரால்** இலவச மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நீதிக்கட்சி மொத்தம் **13** ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது

**வீழ்ச்சி**

- 1937ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியடைந்து, இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது.
- உலகப் பொருளாதார பெருமந்த காலத்தில் பொறுப்பேற்றதன் காரணமாக இக்கட்சியினால் நிலைக்க முடியவில்லை.
- தேசிய இயக்கம் தீவிரமாக நடைபெற்று கொண்டு இருந்த காரணத்தால் இக்கட்சி செல்வாக்கை இழந்தது.
- சாதி மற்றும் பணம் செல்வாக்கு பெறத் தொடங்கியதால் பலவீனம் அடைந்தது.
- 1944ஆம் ஆண்டு சேலத்தில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் அண்ணா கொண்டு வந்த தீர்மானங்களின்படி நீதிக்கட்சி திராவிடக் கழகம் என பெயர் மாற்றப்பட்டது.

**பெரியார்**

- தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதி. பெரியார் அவர்களால் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டது.
- 1879ஆம் ஆண்டு செப்டம்பர் 17ல் செல்வ வளமிக்க குடும்பத்தில் பிறந்தார்
- 1919ஆம் ஆண்டு காங்கிரஸில் இணைந்தார்.
- 1921ஆம் ஆண்டு சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்று 1923ஆம் ஆண்டு இதன் தலைவரானார்.
- 1924ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள **வைக்கம்** என்னும் இடத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆலைய நுழைவு தடைச் சட்டத்தை எதிர்த்து போராடினார்.
- இப்போராட்டத்தின் விளைவாக அரசு ஆலைய நுழைவுச் சட்டத்தை தளர்த்தி அனைவரும் ஆலையத்திற்கு நுழையலாம் என அறிவித்தது.
- இப்போராட்டத்தின் வெற்றியின் மூலம் பெரியாருக்கு **வைக்கம் வீரர்** என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- காங்கிரஸ் நிதி உதவியுடன் சேரன்மாதேவி என்ற இடத்தில் நடத்தப்பட்ட குருகுலப் பள்ளியை பார்வையிட்டார்.
- இப்பள்ளியில் பார்ப்பணர் மற்றும் பார்ப்பணர் அல்லாதவர்களுக்கு தனித்தனியே உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டதை எதிர்த்து சென்னை மாநில காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.
- தனது கொள்கையை பரப்ப 1925ஆம் ஆண்டு **சுயமரியாதை இயக்கத்தை** தோற்றுவித்தார்.

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்**

- மதம், சாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்பணரின் ஆதிக்கத்தை கடுமையாக எதிர்த்தார்.
- மூடநம்பிக்கை, பழமை வாதத்தை ஒழித்தல் ஆகியவை இவரின் நோக்கமாக இருந்தது.
- பெண் கல்வி, விதவைகள் மறுமணம், கலப்பு திருமணம் மற்றும் குழந்தை திருமண முறை ஒழிப்பு

**சாதனைகள்**

- சுயமரியாதை கொள்கைகளை **குடியரசு, புரட்சி மற்றும் விடுதலை** போன்ற பத்திரிக்கையின் மூலம் பரப்பினார்.
- **14** அம்ச சோசலிச அறிக்கையை வெளியிட்டார்.



Free TN Books | www.freetnbooks.com

- பெருகி வரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த குடும்ப கட்டுப்பாட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.
- ரோமானிய எழுத்து முறை பின்பற்ற அறிவுறுத்தினார்.
- சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் **பெரியார் என்ற பட்டம்** வழங்கப்பட்டது.
- 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியை திராவிடக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.

**சி.என்.அண்ணாதுரை**

- 1909ஆம் ஆண்டு செப்டம்பர் 15ம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
- காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கு எதிராக குரல் எழுப்பினார்.
- 1947ஆம் ஆண்டு பெரியார் -மணியம்மை திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திராவிட கழகத்தில் இருந்து விலகினார்.
- 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் **திராவிட முன்னேற்ற கழகம்** என்னும் புதிய கட்சியை தொடங்கினார்.
- 1967ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்றார்.
- ஆட்சியில் ஒருபடி அரிசி திட்டம் கொண்டு வந்தார் (ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசி)
- சித்திரை முதல் தேதி தமிழ் புதுவருட நாளாக அறிவித்தார்.
- 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 16ம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.
- **செக்ரடேரியட்** என்பதை தலைமை செயலகம் என பெயர் மாற்றம் செய்தார்.
- **சத்தியமேவ ஜெயதே** என்ற அரசு குறிக்கோளை **வாய்மையே வெல்லும்** என்ற மாற்றி அறிவித்தார்.
- பிப்ரவரி 3, 1969ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி**

- இந்தியாவின் **முதல் பெண் மருத்துவர்**.
- தேவதாசி முறையை ஒழிக்க போராடியவர்.
- புதுக்கோட்டையில் ஜுலை 30, 1886ல் பிறந்தார்.
- 1949ஆம் ஆண்டு புற்றுநோய் நிவாரண மருத்துவமனையை நிறுவினார்.
- சென்னையில் **புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம்** தோற்றுவித்தார்.
- 1929ஆம் ஆண்டு தமிழக சட்ட மேலவை உறுப்பினரானார்.
- நீதிக்கட்சி அரசாங்கம் **தேவதாசி ஒழிப்பு சட்டத்தை** நிறைவேற்றியது.
- 1930ஆம் ஆண்டு பூனாவில் அனைத்திந்திய பெண்கள் மாநாட்டை நடத்தினார்.
- 1933 முதல் 1947 வரை இடையில் இருவருடங்கள் தவிர தொடர்ந்து மாத சங்க தலைவியாக இருந்தார்.
- ஆதரவற்றோர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு **அவ்வை இல்லம்** என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார்.
- 1968ஆம் ஆண்டு தனது 82வது வயதில் இயற்கை எய்தினார்.

**எஸ்.தர்மாம்பாள்**

- தஞ்சாவூருக்கு அருகில் **கருந்தட்டான்குடி** என்ற இடத்தில் பிறந்தார்.
- சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்டவர்.
- சித்த மருத்துவம் பயின்று சென்னையில் மருத்துவமனை ஒன்றை தொடங்கினார்.
- 1940ஆம் ஆண்டு வரை தமிழாசிரியர்களுக்கு மதிப்பில்லை. ஊதியம் உயர்த்தப்படவில்லை. இதன் காரணமாக **இழவு வாரம்** என்ற போராட்டத்தை நடத்தினார்.



Free TN Books | www.freetnbooks.com

- அப்போதைய கல்வி அமைச்சர் திரு.அவினாசிலிங்கம் செட்டியார் ஊதியத்தை அனைவருக்கும் இணையாக உயர்த்தி வழங்கினார்.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தமிழ் அறிவை வளர்க்கவும், அரசு தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெறவும் பேச்சாற்றல், எழுத்தாற்றல் வளர்த்து கொள்ள **"சென்னை மாணவர் மன்றம்"** உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பின் **10** ஆண்டுகள் தலைவராக பணியாற்றினார்.
- தமிழ்மொழி தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி **தமிழன்னை** என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- ஈ.வே.ரா-வுக்கு பெரியார் என்ற பட்டத்தையும், எம்.கே.தியாகராஜ பாகவருக்கு **ஏழிசை மன்னர்** என்ற பட்டத்தையும் வழங்கினார்.
- 1969ஆம் ஆண்டு தனது 69 வயதில் இயற்கை எய்தினார்.

### மூவலூர் ராமாமிர்த அம்மையார்

- 1883ஆம் ஆண்டு திருவாரூரில் உள்ள மயிலாடுதுறையில் **மூவலூர்** என்ற கிராமத்தில் பிறந்தார்.
- 20ம் நூற்றாண்டில் தோன்றிய பெண் சீர்திருத்த வாதிகளில் மிக முக்கியமானவர்.
- 1925ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் **இசை வேளாளர் மாநாடு** நடத்தினார்.
- தேவதாசி முறைக்கு எதிராக குரல் கொடுத்தார்.
- இவரின் உழைப்பை பாராட்டி தமிழக அரசால் ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படும் திருமண நிதி உதவி அளிக்கும் ஒரு சமூக திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு மூவலூர் ராமாமிர்த அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் என்று பெயரிட்டது
- 1962ஆம் ஆண்டு ஜுன் 27ல் இயற்கை எய்தினார்.

## சுதந்திரத்திற்கு முன் துவங்கப்பட்ட கட்சிகள் மற்றும் எழுச்சிகள்

| ஆண்டு | அமைப்பு | தொடங்கியவர் | இடம் |
|---|---|---|---|
| 1838 | நிலக்கிழார் சங்கம் | துவாரக்நாத் தாகூர் | கல்கத்தா |
| 1839 | பிரிட்டிஷ் இந்தியா சங்கம் | வில்லியம் ஆடம்ஸ் | லண்டன் |
| 1843 | பிரிட்டிஷ் இந்தியா சங்கம் | வில்லியம் ஆடம்ஸ் | கல்கத்தா |
| 1851 | பிரிட்டிஷ் இந்தியா அசோசியேசன்ஸ் | தேவேந்திரநாத் தாகூர் | கல்கத்தா |
| 1852 | மெட்ராஸ் நேட்டிவ் அசோசியேசன்ஸ் | லட்சுமி நரசு செட்டி | மெட்ராஸ் |
| 1862 | லண்டன் இந்திய கமிட்டி | C.V.முதலியார் | லண்டன் |
| 1866 | கிழக்கத்திய இந்திய கமிட்டி | தாதாபாய் நௌரோஜி | லண்டன் |
| 1867 | நேஷனல் இந்தியா அசோசியேசன் | மேரி கார்பெண்டர் | லண்டன் |
| 1872 | இந்திய சங்கம் | அனந்த மோகன் போஸ் | லண்டன் |
| 1876 | இந்திய அசோசியேசன் | அனந்த மோகன் போஸ் | கல்கத்தா |
| 1883 | இந்திய தேசிய சங்கம் | சிசிர் சந்திர போஸ் | கல்கத்தா |
| 1885 | பம்பாய் மாகாண அசோசியேசன் | பெரோஷா மேத்தா, திலாங் | பம்பாய் |
| 1885 | INC | A.O.ஹியூம் | பம்பாய் |
| 1905 | இந்திய பணியாளர் சங்கம் | கோகலே | பம்பாய் |
| 1915 | ஹோம் ரூல் லீக் | அன்னிபெசன்ட் | சென்னை |
| 1918 | U.P.கிசான் சபை | மாளவியா, கௌரிசங்கர் | லக்னோ |
| 1920 | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | M.N.ராய் | தாட்ஷ்கண்ட் |
| 1920 | மக்கள் பணியாளர் சங்கம் | லாலாலஜபதிராய், நேரு | - |



Free TN Books | www.freetnbooks.com

| | | | |
|---|---|---|---|
| 1920 | இந்திய வர்த்தக யூனியன் காங்கிரஸ் | M.N.ஜோஷி, லாலா லஜபதிராய் | லக்னோ |
| 1921 | இந்திய கம்யூனிஸ்ட் குழு | நளினி குப்தா | கல்கத்தா |
| 1923 | சுயராஜ்ய கட்சி | மோதிலால் நேரு, C.R.தாஸ் | டெல்லி |
| 1924 | அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | சத்யபக்தா | கான்பூர் |
| 1927 | அகில இந்திய பெண்கள் கான்பெரன்ஸ் | லேடி சதாசிவ ஐயர் | மெட்ராஸ் |
| 1929 | குடாய் கித்மகார்க் | கான் அப்துல் காபர் கான் | பெஷாவர் |
| 1934 | காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சி | ஆச்சாரியா நரேந்திர தேவ் | - |
| 1936 | எழுத்தாளர் முன்னேற்ற குழு | முன்சி பிரேம்சந்த் | லக்னோ |
| 1936 | கிசான் சபை | சகஜா நந்தா, N.R.ரங்கா | லக்னோ |
| 1939 | பார்வேர்டு பிளாக் | சுபாஷ் சந்திர போஸ் | கல்கத்தா |
| 1940 | ரேடிக்கல் டெமாக்ரடிக் கட்சி | M.N.ராய் | கல்கத்தா |
| 1941 | இந்திய போல்ஸ்விக் கட்சி | அஜித் ராய், இந்திராசென் | கல்கத்தா |
| 1942 | புரட்சிகர சோசியலிச கட்சி | சத்யேந்திரநாத் தாகூர் | கல்கத்தா |

### பத்திரிக்கை சட்டங்கள்

| சட்டம் | தொடங்கியவர் | ஆண்டு | காரணம் |
|---|---|---|---|
| பத்திரிக்கை தணிக்கை சட்டங்கள் | வெல்லஸ்லி பிரபு | 1799 | போர்காலத்தில் பத்திரிக்கை தணிக்கை |
| பத்திரிக்கை சட்டம் | மெட்காஃல்ப் பிரபு | 1835 | இந்திய பத்திரிக்கை சுதந்திரம் அளித்தவர் |
| அனுமதி சட்டம் | கானிங் பிரபு | 1857 | அரசாங்கத்திற்கு நிறுத்தும் உரிமை |
| பதிவுச் சட்டம் | லாரன்ஸ் பிரபு | 1867 | ஒவ்வொரு தாளும் வெளியிடுவோர் பெயர் மற்றும் இடம் அச்சிடப்பட வேண்டும் |
| பிராந்திய மொழிச்சட்டம் | லிட்டன் பிரபு | 1878 | |
| செய்தித்தாள் சட்டம் | மிண்டோ பிரபு | 1908 | தீவிரவாத செயல்களுக்கு எதிராக |
| இந்திய பத்திரிக்கை சட்டம் | மிண்டோ பிரபு | 1910 | கிராம பஞ்சாயத்திற்கு 2 செய்திதாள் |
| இந்திய பத்திரிக்கை சட்டம் | மிண்டோ பிரபு | 1931 | சட்ட மறுப்பு இயக்கத்தை தடுக்க அதிகாரம் |

### பத்திரிக்கைகள்

| வ. எண் | பத்திரிக்கைகள் | தொடங்கியவர் | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | வங்காள கெசட் (முதல் செய்தித்தாள்) | ஜேம்ஸ் அகஸ்டஸ்கி | 1780 |
| 2. | இந்தியன் ஹெரால்டு (ஆங்கிலம்) | வில்லியம் ரூ ஹம்பரிஸ் | 1795 |
| 3. | திக்தர்சன் (முதல் வங்காள மாத இதழ் | வில்லியம் ரூ ஹம்பரிஸ் | 1818 |
| 4. | சமாச்சார் தர்பன் (முதல் வங்க மொழி இதழ்) | வில்லியம் கேரி | 1818 |
| 5. | மீரத் - துள் - அக்பர் (முதல் பாரசீக மொழி) | ராஜாராம் மோகன் ராய் | 1882 |
| 6. | பம்பாய் டைம்ஸ் (1861 Onwards Times of India) | ராஜாராம் மோகன் ராய் | 1838 |
| 7. | இந்தியன் மிர்ரர் | தேவேந்திரநாத் தாகூர் | 1862 |



Free TN Books | www.freetnbooks.com

| | | | |
|---|---|---|---|
| 8. | வங்காளி | கிரிஸ்சந்திர கோஷ் | 1862 |
| 9. | வங்கதர்சன் | பங்கிம் சந்திர சட்டர்ஜி | 1873 |
| 10. | இந்து | ஜி.சுப்ரமணிய அய்யர் | 1878 |
| 11. | கேசரி ரூ மராக்தா | திலகர், அகார்கர் | 1881 |
| 12. | இந்தியன் சோஸிலய்ட் | சியாம்ஸி கிருஷ்ணவர்மா | - |
| 13. | வந்தே மாதரம் | பிக்காஜி காமா | - |
| 14. | கதர் | கதர் பார்ட்டி | - |
| 15. | பாம்பே குரானிக்கல் | பெரேஸாமேத்தா | 1913 |
| 16. | ஹிந்துஸ்தான் டெம்ஸ் | கே.எம்.பணிக்கர் | 1920 |
| 17. | தி மிலாப் (உருது) | எம்.கே.சந்த் | 1923 |
| 18. | லீடர் (ஆங்கிலம்) | மாளவியா | - |
| 19. | கீர்த்தி | சந்தோஷ் சிங் | 1926 |
| 20. | பெங்கால் ரூ கனபானி | கோபு சக்ரவர்த்தி | 1927 |
| 21. | நேஷனல் ஹெரால்டு | நேரு | 1938 |
| 22. | குடியரசு | பெரியார் | 1910 |

**சுதந்திரத்திற்கு பிறகு:**

- ஆச்சார்ய வினோபாபாவே அடிகள் அவர்களால் 1951- **பூமிதான இயக்கம்** தோற்றுவிக்கப்பட்டது
- கதர் மற்றும் குடிசை தொழில் முன்னேற்றத்திற்கு ஜெயபிரகாஷ் நாராயணன் - 1950 **சர்வோதய இயக்கம்** தோற்றுவிக்கப்பட்டது

**பெண்கள் முன்னேற்றம்:**

- 1956ல் இந்து வாரிசுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1961ல் வரதட்சணை தடுப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1961ல் மகப்பேறு சலுகைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1971ல் கரு கலைப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1976ல் சம ஊதிய சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1990ல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1992ஆம் ஆண்டு மகளிர் ஆணையம் கொண்டு வரப்பட்டது.
- ஜனவரி 24, 2011 முதல் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- 1993ஆம் ஆண்டு தொழில் மற்றும் வேலைவாய்ப்;பு வசதிக்காக ராஷ்டிரிய மகிளா கோஷ் தோற்றுவிக்கப்பட்டது.
- 1997ஆம் ஆண்டு வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் குழந்தைகள் நலனைப் பாதுகாக்க பாலிகா சம்ரிதி யோஜனா கொண்டு வரப்பட்டது.
- 1998ஆம் ஆண்டு சுய உதவிக்குழுக்கள் அமைக்க **சுவ சக்தி** திட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1978ஆம் ஆண்டு மார்ச் 8ம் தேதி **முதல் உலக பெண்கள் தினம்** கொண்டாடப்படுகிறது.
- தமிழகத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு 30%, உள்ளாட்சி அமைப்புகளில் 33% சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**சிறார் நலம்:**

- 1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படுகிறது
- 1948ஆம் ஆண்டு இந்திய தொழிற்சாலைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது
- 1951ஆம் ஆண்டு தோட்ட தொழிலாளர்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது
- 1952ஆம் ஆண்டு சுரங்க சட்டம் கொண்டு வரப்பட்டது
- 1960ஆம் ஆண்டு எல்லா மாநிலங்களிலும் சிறார் நல வாரியம் அமைக்கப்பட்டது.
- 1961 ஆம் ஆண்டு பெண் சிசுவதை சட்டம் கொண்டு வரப்பட்டது.



Free TN Books | www.freetnbooks.com

**இரவி சங்கர்**

- 1920ல் உத்திரபிரதேசத்தில் பிறந்தார்
- இவர் சித்தார் கலைஞர்
- 1967ஆம் ஆண்டு கிராமி விருது பெற்றார்
- 1986ஆம் ஆண்டு ராஜ்யசபா எம்.பி
- 1999ஆம் ஆண்டு **பாரத ரத்னா** விருது பெற்றார்
- 2012ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**கே.கிருஷ்ணமூர்த்தி**

- 1895ஆம் ஆண்டு சென்னையில் பிறந்தார்.
- பிரம்மஞான சபையை வளர்த்தார்
- அன்னிபெசன்ட் அவர்களால் **உலககுரு** என்றழைக்கப்பட்டார்.
- கிழக்கின் நட்சத்திரத்தின் வரிசை அமைப்பின் தலைவர்
- 1986ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**எம்.எஸ்.சுப்புலட்சுமி**

- 1916ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார்
- 1974 ஆம் ஆண்டு **ராமன் மகசே** விருது பெற்றார்
- இவர் துவங்கிய வைஷ்ணவ ஜனதா சங்கம் புகழ் பெற்று விளங்கியது
- 1998ஆம் ஆண்டு **பாரத ரத்னா** விருது பெற்றார்.
- 2004ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**அன்னை தெரசா**

- 1910ஆம் ஆண்டு மாக்கடோனியாவில் பிறந்தார்
- இவருடை இயற்பெயர் அக்னேஸ் கேரன்சா பேராஜாஜி ஆகும்
- 1926ஆம் ஆண்டு கன்னியாஸ்திரியானார்.
- 1929ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.
- 1948ஆம் ஆண்டு கல்கத்தாவில் பள்ளி ஆசிரியராக பணியை துவங்கினார்.

**பிற நிகழ்வுகள்**

- 2006ஆம் ஆண்டு காமராஜர் பிறந்தநாள் (ஜுலை 15) கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.
- 1978ஆம் ஆண்டு தமிழகத்தில் 10+2+3 கல்வி முறையை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1982ஆம் ஆண்டு பாரதியார் மற்றும் தெரசா பல்கலைக்கழகம் கொடைக்கானலில் தொடங்கப்பட்டது.
- 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1983ஆம் ஆண்டு கல்பாக்கம் அணுமின் நிலையம் தொடங்கப்பட்டது.
- 1992ஆம் ஆண்டு மகளிர் காவல் நிலையம், தொட்டில் குழந்தை திட்டம் தொடங்கப்பட்டது.
- 2002ஆம் ஆண்டு அன்னதானம் திட்டம் தொடங்கப்பட்டது.
- 2013ஆம் ஆண்டு அம்மா உணவகம் கொண்டு வரப்பட்டது.
- 1918ஆம் ஆண்டு பெரியார் ஈரோடு நகரசபையின் தலைவர் ஆவார்.

……………….



Free TN Books | www.freetnbooks.com

# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய வரலாறு**

**பகுதி : 19ம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்**

**©காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**



Free TN Books | www.freetnbooks.com

# 19ம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்



Free TN Books | www.freetnbooks.com

## 19ம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்

சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் நோக்கம் இந்திய சமுதாயத்தில் இருந்த குறைகளை களைவதாகும். சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களின் வேறுபெயர் **மறுமலர்ச்சி இயக்கங்கள்** ஆகும்.

**பிரம்ம சமாஜம் (1828)**

- இந்திய சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடி **ராஜாராம் மோகன்ராய்** (வங்காளம்)
- 1872ஆம் ஆண்டு வங்காளத்தில் ஹுக்ளி மாவட்டத்தில் பிறந்தார்.
- நூல்கள் - **ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள், அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி**
- ராஜாராம் மோகன்ராய் 1805 முதல் 1914 வரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றினார்
- இரண்டாம் அக்பருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை உயர்த்தி பெற இங்கிலாந்து சென்றார்.
- போகும் வழியில் இங்கிலாந்தின் பிரிஸ்டல் என்னும் இடத்தில் 1833ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- முகலாய மன்னர் இவருக்கு ராஜா என்ற பட்டத்தை வழங்கினார்
- ராஜாராம் மோகன் ராய் **நவீன இந்தியாவின் விடிவெள்ளி** என அழைக்கப்பட்டார்.
- ராஜாராம் மோகன் ராய் வங்காள மொழியில் வெளிவந்த **சம்வாத் கௌமுகி** என்ற முதலாவது வார இதழை தொடங்கினார்.
- **மீரத் - உல் - அக்பர்** என்ற பாரசீக வார இதழுக்கு ஆசிரியராக திகழ்ந்தார்.

**சாதனைகள்**

- 1815ம் ஆண்டு தொடங்கப்பட்ட **ஆத்மிய சபா**, பின்னர் 1828ல் பிரம்ம சமாஜம் என மாற்றப்பட்டது.
- பிரம்ம சமாஜத்தின் கொள்கை - **ஒரே கடவுள், பொது சமயம்**
- உருவ வழிபாடு சடங்குகள், சமய விதிகள், சாதி வேறுபாடு, தீண்டாமை, உடன்கட்டை ஆகியவற்றை பிரம்ம சமாஜம் வெறுத்தது.
- ராஜாராம் மோகன்ராய் உதவியுடன் வில்லியம் பெண்டிங் பிரபு **சதி ஒழிப்பு சட்டத்தை** 1829ல் கொண்டு வந்தார்.
- விதவை மறுமணம், பெண்கல்வி, பெண்கள் முன்னேற்றம், கலப்பு திருமணம் ஆகியவை ஆதரிக்கப்பட்டது.
- ராஜாராம் மோகன்ராய்க்கு பிறகு இச்சபையை ஏற்று நடத்தியவர்கள் **கேசவ் சந்திர சென், தேவேந்திர நாத் தாகூர்.**
- பலதார மணம், குழந்தை திருமணம் தடைச்சட்டத்திற்கு காரணமாக இருந்தவர் **கேசவ் சந்திரசென் (1872)**



Free TN Books | www.freetnbooks.com

**இளம் வங்காள இயக்கம்**

- ஹென்றி விவியன் **டெரோசியொ** இளம் வங்காள இயக்கத்தை நிறுவினார்.
- 1809ஆம் ஆண்டு கல்கத்தாவில் பிறந்தார்.
- இந்துக் கல்லூரியின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- இவரது சீடர்கள் டொரோசியன்கள் என்றும் அவர்களது இயக்கம் இளம் வங்காளம் இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது.

**பிரார்த்தனை சமாஜம் (1867)**

- மும்பையில் **ஆத்மராம் பாண்டுரங்**கால் தொடங்கப்பட்டது..

**நோக்கங்கள்**

- சமபந்தி உணவு, கலப்பு திருமணம், விதவைகள் மறுமணம் பெண்கள் (ம) பின் தங்கியவர்களின் நலன், பர்தா முறை ஒழித்தல்.
- இச்சபை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரவு பள்ளிகள், அனாதை இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்களை நடத்தியது.
- பிரார்த்தன சமாஜத்திற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் - **மகாதேவ் கோவிந்த ரானடே.**
- ராணடே **தக்காண கல்விக் கழகத்தை** போற்றி வளர்த்தார்.

**ஆரிய சமாஜம் (1875)**

- குஜராத் மாநிலம் மூர்வி என்ற இடத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்தார்.
- இயற்பெயர் **மூல்சங்கர்,** ஆசிரியர் - **விராஜனந்தர்.**
- இவரின் குறிக்கோள் **வேதங்களை நோக்கிச் செல்**
- விலங்குகளை பலியிடுதல், உருவ வழிபாடு, சொர்க்கம், நரகம் என்ற கருத்துகளை எதிர்த்தார்.
- மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்ற **சுத்தி இயக்கத்தை** ஏற்படுத்தினார்.
- தயானந்த ஆங்கிலோ வேதப்பள்ளிகள், கல்லூரிகள் நிறுவினார்.
- சீடர்கள் - லாலா லஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டித குருதத்.
- இவரின் முழக்கங்கள் - **சுதேசி, இந்தியா இந்தியருக்கே.**
- இந்து சமயத்தின் **மார்ட்டின் லூதர்** என அழைக்கப்பட்டார்.
- **சத்யார்த்த பிரகாஷ்** என்ற நூல் இவரால் எழுதப்பட்டது.

**பிரம்ம ஞான சபை (1875)**

- மேடம் பிளாவட்ஸ்கி (ரஷ்யா) ஹென்றி.எஸ்ஆல்காட் (அமெரிக்கா) போன்றோர் நியூயார்க் (1875) என்ற இடத்தில் பிரம்ம ஞான சபையை நிறுவினர்.
- தியோஸ் என்றால் கடவுள், சோபாஸ் என்றால் அறிவு, தியோசோபி என்றால் கடவுள் பற்றிய அறிவு



Free TN Books | www.freetnbooks.com

- சபையின் நோக்கம் - சகோதரத்துவம், தெய்வீக சக்திகளை வளர்ப்பது.
- 1893ல் **அன்னிபெசன்ட்** பிரம்ம ஞான சபையின் தலைவரானார்.
- பனாரஸ் மத்திய இந்து கல்லூரியை தோற்றுவித்தார்.
- இவர் தொடங்கிய இதழ் - **நியூ இந்தியா**
- சபையின் தலைமையிடம் **சென்னை (அடையார்)**

**ராம கிருஷ்ண இயக்கம் (1897)**

- சுவாமி விவேகானந்தர் மே1, 1897 அன்று ராமகிருஷ்ண இயக்கத்தை பேலூரில் (கொல்கத்தா) தொடங்கினார்.
- இராம கிருஷ்ண பரமஹம்சரின் சீடர் - விவேகானந்தர். இயற்பெயர் - நரேந்திரநாத் தத்தா
- கல்கத்தாவில் செல்வமிக்க வங்காள குடும்பத்தில் பிறந்தவர்.
- நரேந்திரநாத் தத்தா ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பயின்றார்
- 1893ல் **சிகாகோ**வில் என் **சகோதர சகோதாரிகளே** என உரை நிகழ்த்தினார்.
- இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்க வேண்டும் என விவேகானந்தர் கூறியது **துறத்தல் மற்றும் சேவை.**
- சுவாமி விவேகானந்தர் அவர்கள் **ஜீவாவே சிவா** என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் பணியே கடவுள் பணி என்று தொண்டாற்றினார்.
- கல்வி, உடல் நலம், இளைஞர் நலம் ஆகியவற்றை பேணுதல் (ம) மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள் (ம) செவிலியர் பயிற்சி பள்ளிகளை இந்த இயக்கம் நடத்தியது.
- சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் **சுந்தரவன** பகுதியில் கொண்டு வரப்பட்டது.
- யுனெஸ்கோ ன் செயல்பாடும், ராமகிருஷ்ண இயக்கத்தின் செயல்பாடும் ஒரே மாதிரியாக உள்ளது என கூறியவர் . யுனெஸ்கோ வின் தலைமை இயக்குநர் **பெடரிக்கோ மேயர்** (1993)

**பண்டித ஈஸ்வர சந்திர வித்யா சாகர்**

- சிறந்த கல்வியாளர், சமூக சீர்திருத்தவாதி.
- 1820ஆம் ஆண்டு வங்காளத்தில் மிட்னாபூர் என்ற கிராமத்தில் பிறந்தார்.
- பெண்களுக்காக பல பள்ளிகளை நிறுவினார்.
- இவருடைய காலத்தில் 1856ஆம் ஆண்டு **விதவைகள் மறுமணச் சட்டம்** நிறைவேற்றப்பட்டது.
- **வித்யாசாகர்** என்ற பட்டம் பெற்றவர்.

**சமரச சுத்த சன்மார்க்க சங்கம் (1865)**

- ராமலிங்க அடிகள் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
- பிறப்பு - 1823 (மருதூர்)
- இறைவன் ஜோதி வடிவானவன் என்றும் அருட்பெரும் ஜோதியாக இருக்கிறார் என்று கூறினார்.



Free TN Books | www.freetnbooks.com

- பசித்துயர் போக்க வடலூரில் 1867ம் ஆண்டு **சத்திய தரும சாலையை** நிறுவினார்.
- வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறினார்.
- வள்ளலாரின் போதனை - **மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி**
- சத்திய ஞான சபையை 1872ல் நிறுவினார்.
- இவர் இயற்றிய நூல் - **திருவருட்பா** (பக்தி பாடல் தொகுப்பு), **மனுமறைகண்ட வாசகம், ஜுவகாருண்ய ஒழுக்கம்**

**அலிகார் இயக்கம்**

- சர் சையது அகமது கான் அலிகாரில் **முதல் முஸ்லீம் அமைப்பு** இயக்கத்தை தொடங்கினார்.
- காசிப்பூர் பள்ளி 1864ல் தொடங்கப்பட்டது. இது **அறிவியல் கழகம்** என அழைக்கப்பட்டது.
- 1875ல் முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி தொடங்கப்பட்டது.
- இது முஸ்லீம் பல்கலைக் கழகமாக வளர்ந்தது.
- அலிகார் இயக்கத்தின் செயல்பாடுகள் - பெண்கல்வி (ம) பர்தா அணிவதை நீக்குதல்.
- இவர் நடத்திய தினசரி பத்திரிக்கை - **தாசில் - உத்- அ்லக்**
- இந்துக்களும், முஸ்லீம்களும் **இந்தியா என்ற அழகிய பறவையின் இரு கண்கள்** என்றவர் - சையது அகமது கான்.

**பிற சீர்திருத்தவாதிகள்**

**ஜோதிபா கோவிந்தா பூலே**

- பிராமண மேலாதிக்கத்தை எதிர்த்தவர்
- **சத்திய சோதக் சமாஜ்** (உண்மை தேடுவோர் சங்கம்) 1873ல் ஏற்படுத்தினார்.
- தாழ்த்தப்பட்டோருக்காக குளம் அமைத்து, நீர் பயன்படுத்த உதவி செய்தார்
- 1851ஆம் ஆண்டு ஜோதிபா கோவிந்தா பூலே மற்றும் அவரது மனைவி இருவரும் இணைந்து பூனாவில் முதலாவது பெண்கள் பள்ளியை நிறுவினார்கள்.

**ஸ்ரீ நாராயண குரு**

- 1903, தர்ம **பரிபாலன யோகம்** என்ற அமைப்பை கேரளாவில் ஏற்படுத்தினார்.
- ஈழவ மக்களின் சமூக பொருளாதார கல்வி முன்னேற்றத்திற்காக உருவானது தர்ம பரிபாலனயோகம்.

**ஸ்ரீ பாத சாது மகாராஜா**

- மூங்கிர் மாவட்டத்தில் பிறந்து, வைணவராக மாறியவர்.
- **பிரேமமந்திர்** கோயிலைக் கட்டியவர்
- பல ஆசிரமங்களை நிறுவினார்.



Free TN Books | www.freetnbooks.com

**சீக்கிய சீர்திருத்த இயக்கம்**

- பாபா தயாள் தாஸ் என்பவர் **நிரங்காரி** என்ற இயக்கத்தை தோற்றுவித்தார்.
- கடவுளை உருவமற்றவராக வழிபட வேண்டும் எனக் கூறினார்.
- பாமா ராம் சிங் **நாம்தாரி** இயக்கத்தை நிறுவினார்.

**பார்சி சீர்திருத்த இயக்கம்**

- 1851ஆம் ஆண்டு பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் எஸ்.எஸ்.பெங்காளி என்பவர்களால் பம்பாயில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- ஜகத் மித்ரா என்ற மாத இதழை நவுரோஜி நடத்தி வந்தார்.

**அம்பேத்கர்**

- தாழ்த்தப்பட்ட (ம) தலித் மக்களின் மீட்பாளர்
- **அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவர்**, முதல் சட்ட அமைச்சர்
- 1990ல் **பாரத ரத்னா விருது** வழங்கப்பட்டது.
- ஏப்ரல் 14, 1891ல் மத்திய பிரதேசத்தில் பிறந்தார்.
- சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் சங்கம் (**பஹிஷ்கிரித் ஹிதகரிணி**) என்ற அமைப்பை 1924ல் நிறுவினார்.
- தீண்டத்தகாத மக்களுக்கு **மகத்** என்ற இடத்தில் உள்ள பொதுக்குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையை பெறுவதற்கு 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மும்பையில் **மகத்மார்ச்** என்ற பேரணியை தலைமையேற்று நடத்தினார்.

**பெரியார்**

- ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.
- 1921ஆம் ஆண்டு **கள்ளுக்கடை மறியலின்** போது தனது சொந்த தோப்பிலேயே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.
- 1925ஆம் ஆண்டு **சுயமரியாதை** இயக்கத்தை தொடங்கினார்.
- **குடியரசு, புரட்சி, விடுதலை** போன்ற தமிழ் இதழ்களை தொடங்கி அவற்றின் மூலம் தனது கருத்துக்களை பரப்பி வந்தார்.
- பெண்கள் மாநாட்டில் **1938ஆம் ஆண்டு** ஈ.வே.ராவுக்கு **பெரியார் என்ற பட்டம்** வழங்கப்பட்டது.
- 27.06.1970-ல் ஐ.நாவின் **யுனெஸ்கோ நிறுவனம்** தந்தை பெரியாரை **தெற்கு ஆசியாவின் சாக்ரடிஸ்** என பாராட்டியது.



Free TN Books | www.freetnbooks.com